# பத்தினிப் பெண்டிர்
## (முதற்பகுதி)

YB
N.22-1
149284

964

# PATHNI-PENDIR

(PART I.)

1. ANASUYA.
2. NALAYINI.

BY

P. K. KRISHNAMACHARIAR,
*TAMIL ASSISTANT.*
*Model High School Teachers' College, Saidapet.*

19 JUN 1922

PUBLISHED BY
THE EDUCATIONAL PUBLISHING COMPANY,
SAIDAPET, MADRAS.

1922

[Price 0—5— ]

Y15
N22-1
1124324

13 JUN 1922

ஸ்ரீ

# பத்தினிப் பெண்டிர்

(முதற்பகுதி)

1. அநஸூயை
2. நாளாயனி

புதுப்பட்டு-கடாம்பி கிருஷ்ணமாசாரியர்
எழுதியது.

THE EDUCATIONAL PUBLISHING COMPANY.
Saidapet, MADRAS.

1922

காபிரைட்] [விலை 0-5-0

149284
சென்னை-600 008
13 JUN 1922
115
1122



13 JUN 1922

# முகவுரை.

நமது இந்து மத சம்பந்தம் பெற்ற நூல்களில் ஆங்காங்கு காணப்படும் பதிவிரதைகளின் சரித்திரத்தை அனைவரும் எளிதில் பயின்று அறியுமாறு இனிய தமிழ் நடையில் எழுதி உதவிபுரிய வேண்டுமெனச் சிலர் அன்புடன் உரைத்தமையால், அவர்கள் கருத்திற்கு இசைந்து "**பத்தினிப் பெண்டிர்**" எனும் பெயரிட்டு இச்சிறிய நூலை எழுதலானேன்.

அவகாசமின்மையாலும் பிற காரணங்களாலும், கருதியபடி நூலின் தொகுதி முழுமையும் ஒரே முறையில் வெளியிட இயலவில்லை. இரண்டு மூன்று பகுதிகளாக வெளியிடலா மென்பது நோக்கம்; அதன் முதற் பகுதியாக இச்சிறிய நூல் வெளியிடலாயிற்று. மற்றைப் பகுதிகளும் விரைவில் வெளியாகும்.

கல்விச்சாலையில் பயிலும் மாணவர்க்கும், இல்லற வாழ்க்கை மேற்கொண்ட சிறுமிகட்கும், பிறர்க்கும், இந்நூல் நல்லொழுக்கம் புகட்டி இன்பம் தரற்பாலது ஆகும்.

கல்வித்துறையிலுள்ள அதிகாரிகளும், கல்விச்சாலையிலுள்ள போதகாசிரியர்களும், பிற தமிழ் அபிமானிகளும் இந்நூலை அன்புடன் எற்றுக்கொண்டு எனக்கு ஊக்கமும் உற்சாகமும் பிறப்பிப்பார்களென ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

P. K. K.

# அநஸூயை.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

பண்டொரு காலத்தில் விஞ்சையருலகில் விண்ணவர் சூழ்ந்திருக்க வானவர்கோன், பொற்சிங்காதனத்து அமர்ந்திருந்தனன். அவ்வமயம், தவப்பெருமை பூண்ட முனிவர் பலரும் ஆங்கு வந்திருந்தனர். இந்திரன் இவர்களுடன் பற்பல விஷயங்களைக் குறித்துப் பேசியிருந்தனன். தற்செயலாய்த் தாரணியிற் கற்பரசிகளைப் பல முனிவர்களும் புகழ்ந்து பேசினர். இதைச் செவியுற்ற அமரேசனும், அத்ரி முனிவரின் மனைவியாம் அநசூயை என்பாளின் கற்பழகைச் செவ்வனே புகழ்ந்து மொழிந்தான். முனிவரெல்லோரும் மௌன மெய்தியிருப்ப, நற்றவமுனிவர் நாரதர் எழுந்து 'வேந்தே! அநசூயையின் கற்பைப் பலரும் பலமுறை புகழ்கின்றனர்; யான் சென்று அவளது கற்பின் வன்மையைச் சோதித்தறிவேன்; எனக்கு விடையளிமின்' என வேண்டிக் கொண்டனர்.

விருத்திரனை வதைத்த விஞ்சைமன்னன் இதைக் கேட்டு முறுவலித்து, 'தவமுனிவரே! முவ்வுலகிலும் இடையூறின்றி உலாவிவரும் நுமக்கு அநசூயையின் கற்பில் ஐயந் தோன்றியதும் ஆச்சரியமே! உமது திருவுளத்திற் றோன்றியவாறு நீரே சென்று அவ்வுத்தமியின்

கற்பைப் பரிசோதித்து உணர்வதில் எமக்குச் சிறிதும் தடையில்லை; எனினும் கற்புடைய மங்கையரின் மனம் கலங்குமாகில் மூவுலகு மிடர்ப்படும். ஆகலின், எவ்வுலகத்தவர்க்கும் எவ்வித தீமையும் நேராது உமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வீராக' என்று பகர்ந்தான். அதன்பின் நாரதமுனிவர் இந்திரனையும் மற்றுமுள்ளோரையும் வணங்கி, யாழைக் கையிலேந்தி, அகமகிழ்ந்து பாடிக்கொண்டு அத்ரிமுனிவரின் ஆச்சிரமத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

சித்திரகூட மலைச்சார்பில் ஒரு பக்கத்திலிராநின்றது அத்ரி முனிவரின் ஆச்சிரமம். முதிய வேதியனுருக் கொண்டு பசியான் மெலிந்த மேனியுடன் கண்கள் சுழன்று முகம் வியர்த்துத் தள்ளாடித் தள்ளாடி அவ்வாச்சிரமத்தினருகாமையிற் றோன்றினார் நாரதமுனிவர். அத்தருணத்தில் அத்ரி மாமுனிவர் சற்றுச் சேய்மையிலிராநின்ற ஆற்றுக்குப் புனலாடச் சென்றிருந்தனர். அவரது மனைவியாம் அநசூயை நீவாரங்களைக் கொணர்ந்து அடிசில் முடித்துக் கொழுநரின் நல்வரவை எதிர்பார்த்திருந்தனள். நாரதர் சற்றுத்தொலைவிலிருந்தவாறே அநசூயையைக் கண்டு பனந்திடுக்கிட்டு நடுங்கினார். அத்தருணத்தில் அவரது இடது கண்ணும் இடது தோளும் துடித்தன.

"ஐயோ! இம்மாதுக்குக் கற்பே அணிகலம். இவளது கற்பின் வன்மையைச் சோதிக்கவல்லவன் யாவன்? இவளது கற்பெனும் அனல் மும்மூர்த்திகளையுமே எரிக்கக்கூடும்; என் செய்வேன்! 'நுண்ணிய கருமமுமெண்ணித் துணி' எனும் ஆன்றோரின் மொழியை முற்றிலும் மறந்தேன் போலும். இந்திரன் நவின்றது மெய்யே. இவளது மனங் கலங்கினால் மூவுலகு மழியும். இவளது கற்புநிலையைப் பரீட்சித்தறிவேனென்று விண்ணவையின்கண் உறுதிமொழி கூறிவந்தேன். தொடங்கிய கருமத்தை முடிக்காது விடுவோர் அறிவிலிகள். எனக்குத் தோன்றும் துற்சகுனங்களை நினைக்கையில் மனந் தடுமாறுகின்றது. வருவன வந்தே தீரும். எடுத்த கருமத்தை முடிக்காது விடேன்" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு நாரதமுனிவர் அநசூயையின் எதிரே தோன்றிக் களைப்பினால் பெரிதும் வாடியவர் போல் நடித்துத் தரையின்மீது உட்கார்ந்தார். மிடியுற்றோரிடம் மனங்கரையுங் குணங் கொண்ட உத்தமியான அநசூயையும், அம்முதியவன் அங்ஙனம் வருந்துவதைக் கண்டு மனமுருகி அருகிற் சென்று 'ஐய! நீர் யாவர்? இத்துணைய களைப்புத் தோன்றக் காரணம் யாது? பசியால் மெலிந்தீரோ? உமக்கு வேண்டுவ இன்ன என்று தெரிவிப்பீராகில் அடியேன் ஒரு நொடிப்பொழுதிற் கொணர்ந்து உதவுவேன்' என்றுரைத்தாள். இதமும் இனிமையும் நிறைந்திருந்த அம்மொழிகளைக் கேட்டு நாரதமுனிவர் உவகை பூத்தாரெனினும், தன் மனக்களிப்பை மறைத்து, முன்னினும் இருமடங்கு களைப்புக் காட்டித் தரையின்மீது சாய்ந்து கண்களையடைத்தார். இதைக் கண்டு மனம் நடுங்கிய அநசூயை, குடிசைக்குள் விரைந்து சென்று, சிறிதளவு தண்ணீர் கொணர்ந்து நாரதரின் முகத்தில் தெளித்தாள். அம்முனிவர் கணப்பொழுதில் கண்திறந்து நோக்கி, 'அம்மணி! அடியேன் உணவென்பதைக் கண்டு இன்று மூன்று நாட்கள் சென்றன. வழி தவறி

இக்கானகத்தின்கண் சுற்றித் திரிகிறேன். நாட்டிற்குள் செல்லும் வழியைத் தெரிவிப்போரை இதுகாறும் கண்டிலேன். இப்பெருங் கானகத்தில் மனிதரின் வாழ்க்கையென்பதே இராதென்றல்லவோ எண்ணியிருந்தேன். அருந்ததி போன்ற உன்னைக் காணப்பெற்றது யான் இயற்றிய தவத்தின் பெருமையே யாகும். இக்கணமே எனக்குச் சிறிது உணவளிப்பாயாகில், கடவுள் உன்னை எந்நாளும் காத்தருள்வார்; உன் மங்கலஞ் செழித்தோங்கும்; உன்புகழும் நிலைக்கும்' என மெல்லிய குரலுடன் உரைத்தார்.

அநசூயை இதைச் செவியுற்று 'ஸ்வாமி! அடியாள்மீது அருள்புரிந்து அருகில் தோன்றும் குடிசைக்கு எழுந்தருள வேண்டும். என் கணவர் ஒரு பெருந்தவ முனிவர்; அவர் நீராடச் சென்றிருக்கின்றார்; இதோ வந்துவிடுவர். கொஞ்ச நேரத்தில் இருவரும் ஒருங்கே யுண்ணலாம்' என்றாள். இதைக் கேட்டதும் நாரதர் காதுகளைக் கையாற் பொத்தி 'ஐயோ! நாராயணா! இன்னும் ஒரு நொடிப் பொழுதில் என் உயிர் நீங்கும். நீ எனக்கு இக்கணமே அன்னமிடாவிடில் யான் மடிவது திண்ணம்' என்று பகர்ந்து மிகவும் பாசாங்கு செய்தனர். இதைக் கண்ட அநசூயை மனமுருகி 'ஐய! எழுந்தருளும்; அடிசில் முடித்திருக்கிறேன்; அதிதி பூசையினும் மிக்க தருமம் வேறொன்றில்லை. ஆகலின் இக்கணமே உமக்கு உண்டியளிப்பேன்' என்றாள்.

தருமநெறி யறிந்த அநசூயையின் மொழியைக் கேட்டு யாழ் முனிவர் அடங்கா மகிழ் வெய்தி, மெல்ல மெல்ல எழுந்து குடிசையினுட் சென்றார்.



அத்ரியின் மனைவியும் நல்லதோர் ஆதனமிட்டு நாரதரை அமர்த்தினாள்; பாத்திரங்களிற் றண்ணீரும் வெந்நீரும் கொணர்ந்துதவினாள். புதிய பெரிய கதலி இலையை யெதிரில் இட்டாள். அச்சமயத்தில் நாரதமுனிவர், 'அம்மணீ! ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்தேன். வெகு நாட்களாக யானொரு விரதம் கைக்கொண்டிருக்கிறேன். என் விரதத்தைக் காப்பாயாகில் நீ யிடும் அன்னத்தைப் புசிப்பேன். அன்றேல் பசியால் வருந்தி உயிரை இழப்பேன். ஆகலின் என் விரதத்தைக் காப்பதாக வாக்களிக்க' என்றார். அநசூயை மனம் பதறி 'இஃதென்ன புதுமை! இவ்வந்தணருக்கு அன்னமிட நினைத்து எனக்கென்ன துன்பம் நேருமோ அறிகிலேன்' என நினைந்து 'ஐய! உமது விரதம் யாது? யான் எவ்விதம் அதைக் காத்தல் வேண்டும்? உரைமின். என்னால் இயலுமாகில் உமது கருத்துக் கிசைந்து நடப்பேன்' என்றாள். இதைச் செவியுற்ற மாயவேதியரும் 'அம்ம! நீ ஆடையின்றி எனக்கு அன்னம் அளித்தால் யான் உண்டு பசி தீர்த்துக் கொள்வேன். இதுவே எனது விரதம்' என்றார். அநசூயை, இதைக் கேட்டு அடங்காச் சினங்கொண்டு 'ஐய! இதென்ன அநீதி! குலமகளை ஆடவரெதிரில் ஆடையின்றி வந்து அன்னம் அளிக்கச் சொல்கிறீரே! கொண்ட கணவனே இவ்வாறு உரைத்தாலும் அவள் செய்யத்துணிவளோ? நீர் முதுமையினால் மதியிழந்தீர் போலும். நீர் கொண்ட விரதம் சாலவும் நன்று! நன்று!! உலகத்தில் உம்மைப் போன்ற வயோதிகர்கள் இதைக்கேட்பின் நகைப்பார்களே! மீண்டும் இவ்வாறு இயம்பற்க. மாமுனி எழுந்தருளின் கடுஞ் சினங்கொள்வர். ஆகலின், யான் இடும் உணவை அருந்

திச்செல்லும்' என்று பகர்ந்தாள். நாரதர் கோபமுற்று 'விருந்து உண்ண வந்த எனக்கு நீ செய்கிற மரியாதை போதும்! என் உயிர் உடலினின்றும் பிரியுமளவும் நான் கொண்ட விரதத்தைக் கைவிடேன். நான் சொல்லியவாறு நீ எனக்கு அமுது படைக்காதிருப்பின், இதோ இங்கு படுத்து உயிர் துறப்பேன். சாதுவான ஒரு முதிய வேதியனைக் கொன்ற பாதகம் என்றும் உனக்கு நீடூழி நிற்கும்' எனக் கடுமையுடன் மொழிந்தனர். இதைச் செவியுற்ற அநசூயை மனம் நொந்து 'இஃதென்ன துன்பம்! பசியால் வருந்தும் இவ்வந்தணர்க்கு அன்னமிடலாமென அழைத்து வந்து நான் இந்த ஆபத்துக்குள்ளானேன்! முதியவனெனினுமென்ன? ஆடையின்றி ஆடவரெதிரே நின்று அன்னம் பரிமாறுவது அநீதியாகுமே! இஃதென்ன விரதமோ அறியேன்! இவர் கூறியபடியோ இதுகாறும் இவர்க்கு மாதர்கள் அன்னம் படைத்தனர்? இதை எவ்விதம் நம்புவேன்? இத்தருணம் இவர்க்கு உணவு அளிக்காவிடில் இவர் உயிர் துறப்பது திண்ணம். ஆடையின்றி நின்று அன்னமிட்டால் என் கற்பு நிலைகுலையும். இதற்கு என் செய்வேன்!' என்று பலவாறு சிந்தித்து இறுதியில், கையிற் கொஞ்சம் தண்ணீர் எடுத்துத் தன் கணவரது திருவடிகளை மனத்தில் நினைத்து, 'இதுகாறும் என் கற்பில் குற்றமொன்றுமில்லை என்பது மெய்யாகில் இக்கணமே இவ்வேதியர் அழகிய ஒரு பெண்ணுருவங் கொள்வாராக' என்றுரைத்துத் தண்ணீரை மாயமறையோன் மீது தெளித்தாள். நொடிப்பொழுதில் நாரத முனிவர் தாம் கொண்டிருந்த மாய வேதிய உருவம் மாறிப் பதினெண் பிராயம் வாய்ந்த ஒருபெண் வடிவங் கொண்டார்.



என் செய்வார் பாவம்! கற்பினுக்கு முன் தவப்பெருமை ஓங்காதென்று நாரதர் கண்டிலர் போலும். தாம் பெண்ணுருவங்கொண்டது கண்டு, முனிவர் பெரிதும் நாணங்கொண்டு தக்கணமே அத்ரியின் ஆச்சிரமத்தினின்றும் அந்தர்த்தானமாயினர். எதிரில் இருந்த பெண்மணி திடீரென்று காணாமற் போகவே, அநசூயை திடுக்கிட்டுத் திகைத்து நின்றாள்.

சிறிது நேரஞ் சென்றதும் அத்ரி மாமுனிவர் நானமாடி நற்றவம் புரிந்து தபோவனம் புக்கார்; தம் குடிலை அணுகியதும் தம் இல்லாள் அநசூயை சித்தமாக வைத்திருந்த அர்க்கியம் பாத்தியம் ஆசமநீயம் முதலியவற்றைப் பெற்று ஆச்சிரமத்தினுட் சென்றார். அநசூயை அச்சத்துடனும் நாணத்துடனும் அம்முனிவரின் அடிபணிந்து எழுந்து நின்றாள். அத்ரிமா முனிவர், அநசூயையின் வாடிய முகமலரைக் கண்டு 'கற்பிற் சிறந்த காரிகையே! என்றுமில்லாது இன்று உன் முகமலர் வாடியிருப்பதென்னோ? வைகறையிற் சென்ற நான் வழக்கம்போலின்றி நெடுநேரஞ் சென்று வந்தேனோ? கற்பின் பெருமையால் உனக்குப் பசி முதலிய பிணிகளும் தோன்றாவே! அங்ஙனமிருக்க, நீ இன்று மனம் வாடித் திகைத்து நிற்கக்காரணமென்னோ? யான் இல்லாத தருணத்தில் ஆச்சிரமத்தில் ஏதேனும் துன்பம் நேர்ந்ததோ? விரைந்து சொல்' என்றார். அநசூயை இதைக் கேட்டுக் கைகூப்பி வணங்கி நின்று நிகழ்ந்த வரலாற்றினைத் தெரிவித்தனள். அத்ரி முனிவர் ஆச்சரிய மெய்திச் சற்றுநேரம் கண்ணடைத்து நிட்டையிலமர்ந்து, இந்திரனது திருவோலக்கத்தில் நாரதர் கொண்ட ஐயத்தையும், அதைப் பரீக்ஷித்தறியுமாறு

இவ்வண்ணம் அவர் செய்ததையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோ லுணர்ந்தார். அவ்வமயத்தில் அத்ரி முனிவர் முறுவலித்து 'அநசூய! அஞ்சற்க; உன்னிடம் குற்றமொன்று மில்லை. உனது கற்பின் வன்மையைச் சோதித்து அறிவதற்காக, நற்றவ முனிவர் நாரதர் இவ்விடம் வந்தனர்; கொழுநனைக் கடவுளென்று வணங்கும் வநிதையரின் வன்மையை அவர் அறிந்திலர்; உன் கற்பின் திறமையால் நீ அவரைப்பெண்ணுருவங் கொள்ளச் செய்தாய். நன்று! நன்று! நீ உனது கற்பைக் காக்கச் செய்த உபாயம் மிகவும் கொண்டாடற்பாலது. நாரதர், தவப்பெருமை வாய்ந்தவராகலின் அக்கணமே இங்கிருந்து மறைந்தார். அவரது தவப்பெருமையினும் உனது கற்பின் திறமை மேலானதென்பதற்குக் கொஞ்சமும் ஐயமில்லை; ஆகவே நீ அளித்த பெண்ணுருவத்தை மாற்ற அவர் வல்லவர் அல்லர்; மும்மூர்த்திகளாலும் அதை மாற்றவொண்ணாது. ஆதலால் அவர் பெண்ணுருவத்துடனேயே விஞ்சையருலகிற்கு ஏகியிருக்கின்றனர். இஃது இதனுடன் நிற்பதல்ல. இன்னும் என்னென்ன நிகழுமோ யான் அறிகிலேன். பெண்ணுருவத்தைத் தவிர்க்க அவர் எவ்விதமும் இங்கு வரவேண்டும். உன் கற்பிற் குறையொன்று மில்லாதிருப்பின் உனக்கு எவ்வித அச்சமுமில்லை. நாரதர்க்கே அவமானம் உண்டாகும்; அஞ்சாமலிரு;' என மொழிந்தார். கணவர் கூறிய மொழியைக் கேட்டு அநசூயை ஆச்சரியமும் மகிழ்ச்சியும் எய்தி இனிதிருந்தனள்.

பெண்ணுருவுடன் மறைந்த நாரதமுனிவர் தம் யாழைக் கையிலேந்தி விண்ணுலகம் நோக்கிப் புறப்பட்டனர். அத்ரி முனிவர் அநசூயைக்கு நவின்றது



போலவே பெண்ணுருவை மாற்றிக்கொள்ள நாரதருக்குச் சக்தியில்லாமற் போயிற்று. உடலில் பெண்களின் ஆடை பொலிவதையும் கைகளிற் கங்கணங்கள் விளங்குவதையும் நாரதர் பன்முறை கண்டு பரிதவித்து 'ஐயோ! இஃதென்ன கோலம்? வெளேரென்று வெளுத்திருந்த என் சடைமுடி யெங்கே! யான் உடுத்திருந்த மரவுரி யெங்கே? என்னுருவத்தைக்காண எனக்கே நாணம் மிகுகின்றது! கார்முகில் போன்ற கருங்குழலுடன் கையில் யாழையும் ஏந்தி யான் எங்ஙனம் தெய்வசபைக்குச்செல்வேன்! அவன் இன்றி அணுவும் அசையாதென்பது பொய்யாகுமோ? இதுவும் இறைவனின் திருவிளையாட்டோ? அன்றேல் யான் இயற்றிய வினையின்பயனோ? இவ்வுருவத்தை எவ்வாறு மாற்றிக்கொள்வேன்? எங்ஙனமெனினும் இந்திர சபைக்குச்சென்று நிகழ்ந்த வரலாற்றைத்தெரிவிப்பேன். அங்குள்ளோர் யாதேனும் ஓர் உபாயம் சொல்வார்' என்று தமக்குட் சிந்தித்துக் கொண்டே 'சுதர்மா' எனும் இந்திரசபைக்கு வந்தார். அங்கு எண்டிசையாளரோடும் இன்னும் பல முனிவரோடும் இனிது சம்பாஷித்திருந்த இந்திரன், தொலைவில் வந்து நின்ற நாரதரென்ற பெண்மணியைக் கண்ணுற்றுத் தனது மந்திரியான வியாழனை யழைத்து 'ஐய, அதோ பாருங்கள்! கண்களைக் கவர்கின்ற எழில்கொண்டு இங்கு வரும் இப்பெண்மணி யார்? இவ்வுலகில் இத்தகைய சுந்தர வடிவத்தை நீர் இதுகாறும் கண்டீரோ? முகில்போன்ற கருங் குழலும் மதிபோன்ற வதனமும் கயல்போன்ற கண்களும், கமுகுபோன்ற கழுத்தும், கொடிகள்போன்ற கைகளும், நூலிழைபோல் நுண்ணிய சிற்றிடையும் வாய்ந்த இந்தப் பெண்மணியை

நான்முகக் கடவுள் படைத்ததை யாம் அறியோம்; இவள் நமது சபையை நாடியே வருகின்றனள்' என்றான்.

ஆங்கு அமர்ந்திருந்த அமரர் குழாம் அம்மொழிகளைக் கேட்டு நாரதரையே நோக்கி இருந்தது. இதற்குட் சற்றுச் சமீபத்தில் வந்த நாரதர், நாணத்தால் தலை குனிந்து மெல்ல நடந்து இந்திரன் எதிரே நின்றார். யாழைக் கண்டவுடன் 'மஹதி' என்ற நாரதரின் யாழாக விருந்தது ஆதலால் அவ்வாறு வந்தவர் நாரதர் என்று அறிந்தும், இந்திரன் வெகு நேரமளவும் விந்தையாகப் பேசியபின், நிகழ்ந்த வரலாற்றை நாரதமுனிவர் சொல்லக்கேட்டான். பிறகு விஞ்சைவேந்தன் புன்னகை புரிந்து 'தவமுனிவரே! முன்னமே யானுரைத்ததைக் கேளாமல் இத்துன்பம் எய்தினீர். இனி இதற்கென் செய்யலாம்? இவ்வுருவத்தை மாற்ற இங்கு எவர்க்கும் சக்தி இல்லை. உமது தந்தையின் அடிகளைப் பணிந்து உசிதம்போற் செய்துகொள்ளும்' என்றான். இதைச் செவியுற்ற நாரதர் மனம்வாடி தெய்வ சபையினின்றும் பிரமலோகத்துக்குப் புறப்பட்டனர். விஞ்சையரனைவரும் நாரதர்க்கு உற்ற கதியைக் கண்டு வருந்தினர்.

சத்தியலோகத்தில் நான்முகக்கடவுள் நாமகளுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கையில் நாரதர் அங்கே தோன்றினர். இவரைக் கண்ணுற்ற நாமகள் ஒன்றும் தோன்றாது திகைத்துத் தன் கொழுநனை நோக்கி 'நாதா! இதோ வரும் இப்பெண்மணி யார்? என்னைப் போல் கையில் யாழ் வந்தி யிருத்தலென்ன? இவள் எங்கிருப்பவள்? இங்கு வரக் காரணமென்ன? விரைந்து உரையும்' என்று வினவினள். நான்முகர்



இதைக்கேட்டு 'என் பிரிய நாயகி! இப்பெண்மணியை நான் படைக்கவில்லை. உற்றுப் பார். கையிலிருக்கும் யாழ் 'மஹதி' அல்லவா? நமது புதல்வனான நாரதன், தன் வினைப்பயனால் இவ்வுருவைப்பெற்றான். இவ்வுருவத்துடன் இவன் உலகமுழுதும் உலாவிவரட்டும். அநசூயையின் கற்பைப்பரிசோதிக்கச்சென்று அத்ரிமுனிவர் இல்லாத தருணத்தில் அவளை ஆடையின்றி தனக்குப் பிச்சையிட வேண்டினான். அவளது கற்பின் வன்மையால் இவ்வுருவம் பெற்றான்' என மொழிந்தார்.

இதற்குள் நாரதரும் அருகே வந்து தந்தையின் திருவடிகளைப் பணிந்தெழுந்து அஞ்சலி செய்து நிற்கப் பிரமதேவர் 'ஏந்திழையே! நீ யார்? இங்குவரக் காரணம் யாது?' என வினவினார். இவ்வினாக்களுக்கு நாரதர் விடையொன்றும் பகராது தலைவணங்கி நிற்ப, மீண்டும் மறைக் கடவுள் 'பெண்மணி! ஆடவரிடம் உரையாட நீ அச்சமும் நாணமுங் கொள்வாயாகில், இதோ உன்னைப்போல் ஒரு பெண்கனியகம் வீற்றிருக்கின்றாள். உனது குறையை இவளிடம் உரை' என்றார். நாரதரைப் பரிகாசஞ்செய்ய நல்லதருணமென்றறிந்த கலைமகளும் புன்முறுவல்கொண்டு 'அம்மணீ! உன்பெயர் என்ன? நீ இங்கு வந்து ஒன்று முரையாது நிற்கக் காரணம் யாது?' என்று கேட்டாள். நாரதமுனிவர் ஒன்றும் பதிலுரைக்காமல் மௌனமாக நிற்க, நான்முகர் நகைத்து 'நாயகி! ஸரஸ்வதி! இந்தப் பெண்மணி யார் என்று நானறிந்தேன். நமது செல்வக் குமரன் நாரதன், தனது தவச் செருக்கால் பெண்ணுருக்கொண்டு இங்கு வந்திருக்கின்றனன்' என்றார். இதைச் செவியுற்ற நாரதமுனிவர் மிகுந்த வெட்கங்கொண்டு தலைவண

ணங்கி 'என் அருமைத் தந்தையே! யான் இயற்றிய குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும். இம்முறை எனக்கு நேர்ந்த துன்பத்தைத் தீர்த்து என்னைக் காக்கவேண்டுகிறேன். இனி இங்ஙனம் முறை தப்பி ஒரு கருமமும் செய்யத் துணியேன்' என்று வேண்டினர். நான்முகனார் புன்னகை புரிந்து, 'நாரதா! நீ மொழிவது உண்மையே. ஆனால் கற்பு நிறைந்த அநசூயை இயற்றிய கருமத்தை மாற்ற என்னாலாகாது. என் தந்தையாகிய திருமால் இருக்கின்றார். அவரிடஞ் சென்று உன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வாயாக' என மொழிந்தனர். நாரதர் தலைகுனிந்து மறுமொழி ஒன்றும் பகராமல் பரம்பொருளாய திருமாலைத் துதித்துப் பாடிக்கொண்டு பாற்கடலை நோக்கிப் பிரயாணமாயினர்.

பாற்கடலில் சேடசயனத்தின்மீது மலர்மங்கையின் மடிமிசை முடிவைத்துப் பள்ளி கொண்டிருந்த திருமால், நாரதமுனிவர் பாடியதை உணர்ந்து திடீரென்று துயிலொழித்துப் பள்ளியினின்றும் எழுந்து உட்கார்ந்தனர். எம்பிரான் விரைவில் எழுந்ததைக்கண்ட திருமகள் 'பிராணநாதா! ஏன் இத்துணைய அவசரம்? நீர் சயனித்து ஒரு கணநேரமும் ஆகவில்லையே! இவ்வாறு திடீரென்று எழுந்து உட்காரக் காரணம் யாது?' என வினவினள். இதைக்கேட்ட திருமால் முறுவலித்து 'கமலச்செல்வி! அடியார்கள் என்னை நினைத்துவர நான் எங்ஙனம் துயில்வது? நாரதன் அடாத கருமத்தைச் செய்து படாத துன்பங்கொண்டு பெண்ணுருவம் பெற்று இங்கு வருகிறான். இவன் அநசூயையின் கற்புநிலையைப் பரிசோதிக்கச் சென்று பெண்ணுருவைப்பெற்றான். இவனை எளிதில் விடுவது தகுதியல்ல'



என்று பேசி முடிக்கும் முன்னேயே நாரதர் அங்குத் தோன்றினார். அப்பொழுது கமலமாது நாரதப் பெண்மணியை நோக்கி 'பெண்ணே! கொஞ்சமும் அஞ்சாமல் இவ்விளம் பிராயத்தில் கையில் யாழேந்தி இங்குவந்து நிற்கும் நீ யாரம்மா? தெய்வமங்கையோ? இங்கு வந்த காரணம் யாது? விரைவில் உரை' எனக்கேட்டாள்.

திருமால் புன்னகை புரிந்து இலக்குமியை நோக்கி 'அன்புள்ள செல்வி! உன்னினும் இப்பெண்மணி எழில் கொண்டவள். கையில் யாழைக் கண்டால் கந்தர்வமங்கை எனத் தோன்றும். கந்தர்வர்கள் கானத்திற் சிறந்தவர்களல்லவா? ஆதலின், நீ இவளைச் சற்று நேரம் கானஞ் செய்யும்படி வேண்டிக்கொள். இனிய கான ரசத்தைச் சற்றுப் பருகுவோம். உன்னைப் போன்ற பெண்மணியாதலால் நீ சொல்லக் கேட்பாள். நான் சொல்வது தகுதியல்ல' என்றுரைத்தார்.

கணவனின் கருத்தையறிந்த கமலச்செல்வி 'பெண்ணே! என் கணவருக்குச் சங்கீதத்தில் விருப்பம் அதிகம். ஆதலின் நீ உட்கார்ந்து இனிய சில பாடல்களை சிறிது போது பாடு. பிறகு நீ இங்குவந்த காரணத்தைத் தெரிவிப்பாய்' என்றாள். தமது அனந்தமான குணங்களை அடியார்கள் அடிக்கடி பாடக்கேட்டு ஆனந்திக்குந்தன்மை வாய்ந்தவர் திருமால் என்பதை யுணர்ந்த நாரதமுனிவர் சிரக்கம்பஞ்செய்து கீழேயுட்கார்ந்து இந்திரனது கொலுமண்டபத்தில் தனக்குத்தோன்றிய ஐயமுதல் தான் பெண்ணுருக்கொண்டு மிகவும் வருந்தி ஒவ்வோரிடஞ் சென்றதை இயம்பி, பின் கதியின்றித் திருமாலே சரணமென்று வந்ததையும் இனிய பாடல்களாக்கிப் பாடிப் பின்னும் பெ

ருமானது திவ்யகுணங்களைப் புகழ்ந்து பாடி எழுந்து நின்றார். கார்வண்ணன் இதைக் கேட்டு 'என்ன புதுமை! நாரதனா இவ்வாறு பெண்ணுருவத்துடன் வந்திருக்கிறான்! வெகு அழகு! வெகு அழகு! ஆ! அநசூயையின் கற்பல்லவோ கற்பு! அவள் கொடுத்த இப்பெண்ணுருவத்தை என்னால்மாற்றவொண்ணாது. நாரதா! உனக்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன்; கேள்; நீ இக்கணமே கைலை மலைக்கு ஏகி மலைமகளின் மணாளனாகிய மகேசனை வேண்டுவையேல் உனது எண்ணம் நிறைவேறும்' என்றுரைத்து நகைத்தார். நாரதர் தம் வினைப் பயனை நினைந்து நினைந்து சிந்தைநொந்து கைலயங்கிரிக்கு ஏகினார். நாரதர் சென்றவுடன் இலக்குமி 'என் பிராண நாதா! ஏன் இவ்வாறியம்பினீர்? உம்மினும் உமாபதி மேன்மையுற்றவரோ? நான் பாற்கடலின்று தோன்றியதும், தெய்வங்களுள் நீரே மேலானவர் என்றல்லவோ நினைத்து உம்மைமணந்தேன். நான் செய்தது பிழையோ? அன்றேல் நாரதரின் பெண்ணுருவத்தை நீர் மாற்றிக் கொடாது சிவபிரானிடம் அவரைச் செல்லும்படி யனுப்பிய காரணமென்ன?' என வினவினாள். இதைக் கேட்ட கமலக்கண்ணன் 'அடி பேதாய்! உண்மை யுணர்ந்த நீயும் இவ்வாறு வினவுதல் விந்தையே! அறிவிலிகள் அன்றோ அரி யென்றும் அரன் என்றும் அயனென்றும் வேற்றுமைப்படுத்தி வணங்குகின்றனர்? உண்மை உரைப்பில் மும்மூர்த்திகளிலும் பேதமில்லை; உலகங்களை ஆக்கவும் ஆளவும் அழிக்கவும் அயன் அரி அரனென்ற மூன்று வடிவங்களைக் கொண்டோம்; நாரதனின் பெண்ணுருவத்தை மாற்ற எங்களிலெவராலு மாகாது. கற்பரசியாகிய அநசூயை செய்த காரியத்தை நாங்கள்



மாற்றுவோமாகில் உலகத்தில் கற்பின் சிறப்புச் செழித்தோங்குவதெங்ஙனம்? கற்புநிலை கொண்ட மங்கையர்க்குத் தீங்கிழைக்க நினைக்குமறிவிலிகள் வினைப்பயனை அடைவதெங்ஙனம்? நாரதன் செய்யத் துணிந்தது அநீதி. அவனது பெண்ணுருவை அநசூயையே மாற்ற வேண்டும். நாரதன் இப்பெண் வடிவத்துடன் எங்குந் திரிந்து நாணங்கொண்டு தான்செய்யத் துணிந்த கருமம் முறை தவறியது என்று உணரும்படி அவனை இடத்துக்கிடம் ஏகும்படி எல்லோரும் விடுத்தனர். இதுவே உண்மையென்றுணர்.' என்றார்.

கைலையில் மலைமகளுடன் சம்பாஷித்திருந்த செஞ்சடை முடியோன், நாரதரின் வரவை ஞானதிருஷ்டியா லுணர்ந்து 'பார்வதீ! இசைபாடுவதில் மூவுலகிலும் புகழ்பெற்ற பெண்ணொருத்தி இன்னும் கணநேரத்தில் இங்கு வருவாள்; உன்னினும் வனப்பு மிகக்கொண்டவள்; இன்னிசை வாய்ந்தவள்; சொன்னயம் பெற்றவள்; சுவர்ண நிறத்தாள். இதுகாறும் இத்தகைய எழில் வாய்ந்த ஏந்திழையை நீ எங்கும் பார்த்திருக்கமாட்டாய்'' என்றுஉரைத்தார். மதிமுடியோன் இவ்வண்ணம் பகரும் தருணத்தில் நாரதரும்ஆங்குத்தோன்றலாயினார். அவரது பெண்வடிவையும் வனப்பையுங்கண்டு உமையாளும்கலங்கி நின்றாள். நாரதர் சிவபிரானை வணங்கி எழுந்து, தமது கால் பெருவிரலை நோக்கிய வண்ணம் நின்றிருந்தார். அப்பொழுது கங்காதரன் 'உமா! உன்னைப்போன்ற பெண்ணொருத்தி வந்து நிற்பதைக் கண்டிலையோ? உன்னினும் இவள் எழில் வாய்ந்தவளென்று அழுக்காறு கொண்டனையோ? அவள் என்னுடன் பேசுவதற்கு நாணப்படுகிறாள். இவள் யார்? இங்கு வரக் காரணமென்ன?

இவைகளை அறிந்து கொள்வது உன் கடமை' என மொழிந்தார். இதைச் செவியுற்ற உமையாள் முறுவலித்து 'அழகிற் சிறந்த பெண்மணியே! நீ யார்? எங்கிருந்து வருகின்றனை? இங்குவரக் காரணமென்ன? உன் சுந்திர வடிவத்தைக் கண்குளிரக்கண்டு களிக்கும் உனது கணவன் யார்? உன்னைப்பெற்றெடுத்து வளர்த்ததால் நின் தாய்தந்தையர் பெருந்தவ மிழைத்திருக்க வேண்டும். இவ்விளம்பிராயத்தில் இல்லற வாழ்க்கையை நடத்தாது இங்ஙனம் நீ புறப்பட்டது என்?' என்று வினவினாள். அம்பிகையின் சொற்கள் நாரதரின் மனத்தில் அம்புபோல் பாய்ந்தன. மறுமொழி யொன்றுங் கூறாது மௌனமாய் நின்ற நாரதர், கண்ணீர் பெருக்கியதைக் கண்ட கபாலி, நிகழ்ந்த வரலாற்றை உமையாளுக்கு எடுத்துரைத்தனர். அவளும் அநசூயையின் கற்பைக் கேட்டு ஆச்சரியமுற்று நாரதரை நோக்கி 'முனிவரே! இதற்காக நீர் இங்ஙனம் வருந்துவதேனோ? பெண்ணுருவத்தை நீர் இகழக் காரணம் யாது? சடைமுடியும் மரவுரியும் போய்க் கருங்குழலும் நற்றுகிலும் பெற்றீர்! முதுமையை ஒழித்துப் புதுமையைப்பெற்றீர்! இத்தனை நாட்களாக நீரியற்றிய நற்றவத்தின் பயனால் நீர் இவ்வெழில் பெருகிய வடிவத்தை எய்தினீர்! முனிவேடத்துடன் முன்னாளில் வாழ்ந்தது போதாதோ? இவ்வழகிய உருவத்துடனேயே இனி வாழ்வது நலம் என்று எனக்குத் தோன்றுகின்றது?' என்றாள். இதைச்செவியுற்றிருந்த சங்கரர் 'காதலி! ஏற்கனவே மனம் நொந்த நாரதர்மீது சொல் அம்பு தொடுக்காதே. இப்பெண்ணுருவத்தை மாற்ற என்னாலுமாகாது. கற்பிற்கரசி அநசூயையே இதைமாற்றவேண்டும். இதுகாறும் பலவுலகிலும் சுற்றித்



திரிந்த நாரதன் மீண்டும் அத்ரியின் ஆச்சிரமஞ் சென்று அநசூயையை வணங்கி வேண்டியிருப்பானாகில் இப்பெண்ணுருவம் முன்னமே நீங்கியிருக்கும்' என்று இயம்பினார்.

அச்சமயத்தில் அயனும் நாமகளும், அன்னத்தின் மீது ஏறியும், அரியும் பூமகளும் கருடனின்மேலும், இந்திரன் விஞ்சையர் புடைசூழ ஐராவதத்தின் மீதும் கைலையம் பதிக்கு வந்தனர். சிவபிரானும் சிவகாமியும் எல்லோரையுங் கண்டு மகிழ்ந்தார்கள். மலைமகள், நாமகளையும் பூமகளையும் உபசரித்து வீற்றிருக்கச்செய்து, நாரதர் கொண்ட பெண்வடிவத்தின் வனப்பை வர்ணித்துப் பேசலாயினள். விஞ்சையரனைவரும் மும்மூர்த்திகளுடன் உரையாடி அநசூயையின் கற்பின் பெருமையைப் புகழ்ந்தனர். இதைச் செவியுற்ற மும்மூர்த்திகளின் தேவியர்களும் மங்கையர்க்குரிய பொறாமையுற்றுத் தங்களது மணாளர்களை நோக்கி 'மூவுலகினைப் படைக்கவும் பாதுகாக்கவும் அழிக்கவும் வல்லவரான நீங்களும் நாரதரின் பெண்ணுருவை மாற்ற மனங் கொள்ளாமல் இவ்வாறு அவரைப் பரிகசித்தல் நீதியாகுமோ? உங்களில் எவரேனும் இவ்வாறு இடர்ப்படுவாராகில் அத்துன்பத்தைத் தீர்ப்போர் யார்? அநசூயையின் கற்பைப் பரிசோதித்தறிய நாரதருக்கு வன்மை போதாது. உங்களில் எவரேனுஞ் சென்று அவளது கற்பைச் சோதித்து வாருங்கள்' என்றுரைத்து நகைத்தார்கள். இதைச் செவியுற்ற மும்மூர்த்திகளும் தங்களது மனைக்கிழத்திகளுக்கு மதி புகட்ட அதுவே நல்ல தருணமென்று நினைத்து 'உங்களுக்கும் நாரதனைப் போலவே அநசூயையின் கற்பில் ஐயம் தோன்றுமாகில் நீங்களும் இடர்ப்படவேண்டும். எங்களில்

எவர் சென்றாலும் அவ்வுத்தமியின் கற்பைப் பரீட்சித்தறிவது அசாத்தியமாகும்; இதில் எங்களுக்கு ஐயமில்லை; அப் பதிவிரதை எங்களுக்கு எவ்வுருவங் கொடுப்பாளோ? நாங்களறியோம். பெண்புத்தி பின்புத்தி என்று நீங்கள் பிறகு வருந்தாதீர்கள்' என்றார்கள்.

இதைக் கேட்ட நாமகள் நான்முகனை நோக்கி 'நீர் சென்று அநசூயையின் கற்பைக் கண்டு வருவீராக. அது வரையில் இவர்களெல்லோரும் இங்கு இருப்பார்கள்' என வேண்டினள். நான்முகன் எல்லோரிடமும் விடை பெற்று நொடிப் பொழுதில் அத்ரி முனிவரின் ஆச்சிரமம் அடைந்தனர். அத்தருணமும் அம் முனி புங்கவர் ஆங்கில்லை. மறைக்கடவுளும் முதிய மறையவன் வேடங் கொண்டு சென்று அநசூயையிடம் பிக்ஷை வேண்டினர். அவ்வுத்தமி, ஆச்சிரமத்தினுட் சென்று தண்ணீர் கொணர்ந்து 'நீர் யாரேனுமாகுக; உள்ளத்தில் கள்ளமிருப்பின் இக்கணமே ஒரு சிறு குழந்தை வடிவங் கொள்வீர்' என்றுரைத்துத் தண்ணீரைப் பிரமன்மீது தெளித்தனள். தக்கணமே அயன் ஆறுமாதத்திய குழந்தையுருவங்கொண்டு தரையிற் கிடந்தான். இது நிகழ்ந்து சிறிதுநேரஞ் சென்றதும் அத்ரிமுனிவர் அங்கு வந்து நடந்த வரலாற்றை நன்கு உணர்ந்து தம் தவப்பெருமையால் பின்வரும் வரலாற்றையும் செவ்வனே தெரிந்து பத்தினியை நோக்கி 'என் இன்னுயிர்த்தலைவி! உன் கற்பின் திறமையை இன்றைக்கு மூன்றுநாள் நீயே நன்குணர்வாய். ஆகலின் அதை இப்போது யானெடுத்துரைத்தல் நன்றன்று' என நவின்று வாளாவிருந்தனர்.

குழந்தை தரையிற் கிடந்து தவழ்ந்து அழக்கண்ட அநசூயை 'நாதா! பெண்புத்தியின் பேதமையால் நான்,



பிக்ஷைக்கு வந்த அந்தணரைக் குழந்தையாக்கித் தீர்த்தேனே! இச்சமயம் இக்குழந்தை அழுகின்றதைக் காண என்மனம் உருகுகின்றது! முன் வந்து பெண்ணுருவங்கொண்ட நாரதமுனிவர் எங்குச் சென்றாரோ அறியேன்; நற்பருவம் வாய்ந்த பெண்ணுருவங்கொண்ட அவர் இப்போது இங்கிருந்தால் இக்குழந்தையை எடுத்து வளர்த்து எனக்கு உதவிபுரிவார். நான் இம் முது வயதில் என்செய்வேன்?' என்றுரைத்து நகைத்து நின்றாள். அவ்வாறு நின்ற அநசூயையை நோக்கி அத்ரிமுனிவர் 'என் இன்னுயிர்க் காதலி! இக்குழந்தையை நாரதமுனிவர், பெண்ணுருவத்துடன் வளர்த்தலரிது. தவப்பெருமை வாய்ந்தவர்க்கு இளமையென்றும் முதுமையென்றும் வேற்றுமையுண்டோ? அனைத்தையும் படைத்த அயனே இக்குழந்தையை வளர்க்க இளமையும் திறமையும் தருவான். நீ அஞ்சற்க' என்று மொழிந்து சென்றார். பன்முறையும் பாலகன் அழுவதைக் கண்ட அநசூயை 'இதென்ன மாயமோ நானறியேன்! முன் வந்தவரோ நாரதமுனிவர். பின் வந்தவர் எம்முனிவரோ? அறிகிலேனே! முனிவர்க்கிதுவோ மறைகள் விதித்த முறை?' என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு பாலனுக்குப் பால் புகட்டித் தாலாட்டினாள்; கொடிகள் கொண்டு தொட்டிலொன்று கட்டி அதில் தளிரும் மலரும் இட்டு அதிற் குழந்தையை வளர்த்தினாள். குழந்தையும் கண் வளர்ந்தது.

அயன் சென்று வெகு நேரமாகியும் வாராமையால் நாமகள், மனம் பதறி நின்றாள். இதையுணர்ந்த செங்கமலச் செல்வி கணவனை அணுகி 'நாதா! நான்முகன் சென்று நெடுநேரமாயிற்றே; இன்னும் வரக்காணோமே!

அவர்க்கென்ன நேர்ந்ததோ? அதையுணர்ந்து உள்ளபடி
உரையும்' என்று வேண்டினள். சக்கிரபாணி இதைக்
கேட்டு முறுவலித்து 'என் கண்மணி! கமலா! கற்பின்
வன்மையைக் கண்டவர் யார்? அநசூயை தனது கற்
பின் மேன்மையால் அயனுக்கு எவ்வுருவம் கொடுத்தன
ளோ? யான் அறியேன்!' என்றார். இதைச் செவி
யுற்ற செங்கமலத்தாள் 'அங்ஙனமாகில் நீர் சென்று
அறிந்துவாரும். அதுகாறும் யாங்கள் இவ்விடத்திலேயே
இருக்கின்றோம்' என மொழிந்தாள். தன் இல்லாளின்
நன்மொழியைச் செவியுற்ற முகுந்தனார், முதியவேதி
யனுருவங்கொண்டு அத்ரி முனிவரது ஆச்சிரமம்சென்று
பிக்ஷை வேண்டினர். முன்போன்ற மறையோனொருவன்
மறு முறையும் பிச்சைக்கு வந்ததைக் கண்ட அநசூயை
அஞ்சாமல் அத்திருமாலையும் ஒரு சிறு குழந்தையாக
மாற்றி முன் கண்வளர்ந்த குழந்தையின் பக்கத்தில்
விடுத்தனள். தம் மனைக்கிழத்தியின் தெய்வத்தன்மையை
யும் தெய்வங்கள் இவ்வாறு திருவிளையாட்டாய் அயர்
வதையும் கண்டிருந்த தவமுனிவர் அத்ரி, மெய்ம்மறந்து
வெகு நேரம் தியானத்திலிருந்தார். மாமுனியின் மனைவி
இம்முறை தன் கணவனிடம் ஓடோடியும் வந்து பணி
ந்து ஆச்சிரமத்தில் இரண்டாங் குழந்தை தோன்றிய வர
லாற்றை எடுத்துப் பரக்கப் பகர்ந்தாள். குடத்திற்குள்
ஏற்றிய விளக்கின் கொழுந்தென அத்ரிமுனிவர், கொஞ்
சமும் சலிக்காது புலன்களை அடக்கி யோகத்தில் அமர்ந்
திருந்தனர்.

மாதவனும் சென்று மீண்டு வாராமையால், மலை
வளர்ச்செல்வி, தன் கொழுநனைத் தொழுது எழுந்து



'ஐய! அத்ரியின் ஆச்சிரமஞ் சென்று அயனும் அரியும்
யாது செய்தார்களென்ற செய்தியை அருளுடன் எங்க
ளுக்கு உணர்த்துவது உமது கடமை. நாமகளும் பூம
களும் ஏங்குகின்றனர். இஃதென்ன புதுமை?' என்று
வேண்டினள். இதைக் கேட்ட சடைமுடியண்ணல்
'கண்மணி! பார்வதி! கணப்பொழுது நீங்கள் இங்கு
இருங்கள். நான் சென்று நிகழ்ந்த செய்தியை உணர்ந்து
வருவேன்' என உரைத்து உடனே அவரும் தவமுனி
யின் பர்ணசாலைக்குச் சென்று அநசூயையின் பெருமை
யால் அயன் அரிகளது கதியை அடைந்து குழந்தை வடி
வம் பெற்று அவ்விரு குழந்தைகளுடன் கிடக்கலாயினர்.

வெகு நேரம் தியானத்திலிருந்த அத்ரி மாமுனிவர்
திடுக்கிட்டெழுந்து முடிமிசை கரம் குவித்து மூவர்களை
மும்முறை வலம் வந்து, தன்னருகே நின்றிருந்த அநசூ
யையைத் தழுவி ஆனந்தக் கண்ணீர் உதிர்த்து 'என் கண்
மணீ! கண்ணெதிரே உறங்கும் இம் மூன்று குழந்தை
களும் யாவரென்று நீ உணரவல்லை; உன் கற்பின் வன்
மையை நான் இன்று கண்டேன். நீ எனக்கு மனைக்கி
ழத்தியானதும் என் நற்றவப் பெருமையன்றோ?' என
மொழிந்தனர். தன் கணவரின் மொழியைச் செவியுற்ற
அநசூயை பெரு மகிழ்ச்சியுற்று அசைவற்று நின்றாள்.
ஆச்சிரமத்தின்கண் துயிலும் மூவர்களையும் அத்ரிமுனி
வர், கண்குளிரக் கண்டு உடல் பூரித்து மெய்ம்மறந்து
அதிசயித்து 'ஆகா! மறைப்பொருளும் மறைபொரு
ளும் நீங்களே! மனத்திற்கும் எட்டாத பொருள்
களும் நீங்களே! உலகங்களை ஆக்கி அளித்து அழிப்ப
வரும் நீங்களே! விண்ணினின்று தோன்றும் தண்

ணீர் ஒரே தன்மையதாயினும் இடத்துக்கு இடம் நிறமும் சுவையும் மாறுபடுவதுபோல் உண்மையில் உங்கள் உருவம் ஒருருவமெனினும் முக்கருமங்களை முடிக்க முக்குணங்களெய்தி மும்மூர்த்திகளானதும் நீங்களே; நீங்களே உலகத்தை வெல்வோர்; உங்களை வெல்வோர் வேறில்லை; நீங்கள் அனைவர் மனத்தின்கண் வதிந்தும் உங்களைக் காணலரிது; உங்களுக்குத் துன்பமென்பதில்லை; முதியவரெனினும் முதுமையற்றீர்; நீங்களே எல்லாம் அறிந்தவர்; உங்களை அறிந்தாரில்லை; நீங்களே உலகங்களுக்கு முதற்காரணம்; உங்களுக்குக் காரணமில்லை; உடலின் உயிரும், இடம்பொருள் ஏவலும், பஞ்சபூதங்களும் நீங்களே! வானினின்று விழுகின்ற மழை எங்கு விழ்ந்தாலும் பெருகு வெள்ளமாய் ஓடிக் கடலில்சேர்வதுபோல், உலகத்தவர்செய்யும் எவ்விதக் கருமங்களும் உங்களிடம் சேர்கின்றன; அருளும் நீங்களே; பொருளும் நீங்களே; ஆதியந்தமில்லாது அந்தரத்தில் நிற்கும் சுடற்சோதியும் நீங்களே; பாசமறுத்த பெரியோர்கள் மனத்தினிடம் உதிக்கும் பேரொளியும் நீங்களே; எவ்வுருவத்தைக் காணவேண்டுமென்று காயக் கிலேசஞ் செய்து இதுவரை பெருந் தவமியற்றினேனோ அவ்வுருவத்தை இன்று இங்கு கண்டேன் கண்டேன்; என் ஆசிரியர் ஆசிகூர்ந்து அஞ்சலென்றுரைத்து எனக்கு உபதேசித்த மகாமந்திரத்தின் பொருளை இன்று கண்டேன்; இன்று என்தவம் பயன் பெற்றது; இக்குடிசை புனிதமாயது; என் பிறவி ஒழிவடைந்தது' என்று பலவாறாக வெகு நேரம் துதித்து ஆனந்தித்திருந்தார்.

மும்மூர்த்திகள் சென்று வாராமையால் நாமகளும் பூமகளும் மலைகளும் சிந்தைகலங்கி இந்திரனை நோ



க்கி 'அமரேசா! இனி நாங்கள் ஒரு கணமும் எங்களது கணவர்களைக் காணாது இங்கு இருக்க மனம் சகியோம்; நாரதமுனிவனால் வந்த வினையல்லவோ இது? தான் துன்பமுற்றது போதாது என்று எங்களுக்கும் துன்பத்தை விளைவித்தான். ஆகலின் நீர் விரைவிற் சென்று எங்களது கணவர்களைக் கண்டு வந்து செய்தி சொல்லும்' என்று அவனை ஏவினார்கள். இவ்வசனத்தைக் கேட்ட விஞ்சையர்கோன் 'அன்னைமீர்! எல்லாமுணர்ந்த உங்களுக்கும் யான் உரைக்க வேண்டுமோ? அநசூயையின் கற்பின் பெருமையால் மூவர்களும் அவளுக்குக் குழந்தைகளாகிப் பாலருந்திப் பசியின்றி உறங்குகின்றனர். நாரதமுனிவரின் செய்கையால் உலகத்தில் படைப்பு முதலிய முக்கருமங்களும் ஒழிந்தன. இந்தப் பெண்ணுருவம் கொண்ட நாரதமுனிவர் அங்குச்சென்று அநசூயையை வேண்டினாலன்றி நாம் மும்மூர்த்திகளைக் காண்டலரிது. ஆகலின் இவரையும் அழைத்துக்கொண்டு நாமெல்லோரும் அத்ரிமா முனிவரின் ஆச்சிரமஞ் செல்வோம்' என மொழிந்தான். இதைச் செவியுற்ற முத்தெய்வமங்கையர்கள், பெண்ணுருவங்கொண்ட நாரதரையும் உடன்கொண்டு அத்ரி மாமுனிவரின் தபோவனம் நாடிப் புறப்பட்டார்கள். இந்திரனும் ஐராவதத்தின் மீதேறி தேவர்கள் புடைசூழ அத்ரியின் ஆச்சிரமத்தின் எதிரே வானத்தில் நின்றான்.

மலர்மகளும் மலைமகளும் கலைமகளும் நாரதப்பெண்மணியுடன் அத்ரியின் தபோவனம் புகுந்து அநசூயையைக் கண்டு 'அம்ம! நீ கொடுத்த பெண்வடிவத்துடன் நாரதமுனிவர் இதோ வந்திருக்கிறார். எங்கள் கணவர்கள் மூவரும் இங்குவந்தனரே! அவர்கள் எங்குச் சென்

றார்கள்?' என்று வினவினர். இத் தெய்வமங்கையர்களைக் கண்ட நற்றவ முனிவர், அநசூயையை நோக்கி 'உன் பாக்கியமே மேலானது; இத்திருவிளையாட்டின் உண்மையை நீ இன்னும் அறியவில்லையோ?' என்றார். அநசூயை மும்மூர்த்திகளின் பத்தினிகளை நோக்கி 'அன்னைகாள்! நீங்கள் யார்? உங்களது கணவரை யான்காண்டிலேன். மூன்று முதிய மறையோர்கள் இங்கு வந்து குழந்தை வடிவெடுத்துக் கண்வளர்கின்றனர். அதோ பாருங்கள்' எனச் சுட்டி உரைத்தாள்.

நாமகள் முதலான மூவரும் நாரதரும், தொட்டிலின் அருகே சென்று நோக்குமிடத்து, கார்மேக வண்ணங் கொண்ட கமலாபதியும், செம்பவள வண்ணங் கொண்ட உமாபதியும், நாமகள்கொழுநனும் கண்விழித்துக் குழந்தையுருவத்துடனே அழத் தொடங்கினார்கள். அநசூயை ஓடிவந்து குழந்தைகளை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து அணைத்துத் தரையிற்கிடத்தினள்; நாரதரும் நாமகள் முதலியோரும் அதனைக் கண்டு சித்தப்பிரமை கொண்டு அநசூயையை வலம்வந்து வணங்குகையில் விஞ்சையர் வானகத்தினின்றும் பூமாரி பொழிந்து பதினெண் வாத்தியங்களும் ஆர்த்தனர். மும்மூர்த்திகளின் மனைவிகள் மூவரும் சிரமேற் கரங்குவித்து 'தாயே! நீயே கற்பிற்கரசி; நாங்கள் உனது பணிப்பெண்கள். இக்குழந்தைகள் மூன்றும் எங்களது கணவர்களாய மும்மூர்த்திகள். எங்கள்மீது அருள் புரிந்து அவர்களுக்கு இக்கணமே சுவயவடிவங் கொடுத்து எங்களைக்காப்பாயாக' என்று வேண்டிக் கொண்டனர். இதைச் செவியுற்ற அநசூயை இன்பக் கடலில் மூழ்கிப் பரவசமாகி உவகையால் கண்ணீருதிர்த்துக் குழந்தைகளைப் பரிசித்தாள். தக்கணமே மும்மூர்த்திகளும் தங்க



149285

ளது மனைவிகளுடன் தங்களுக்குரிய ஊர்திகள்மீது ஆகாயத்தில் தோன்றி அத்திரி முனிவர்க்கும் அநசூயைக்கும் காட்சியைத் தந்தருளினார்கள். அநசூயையின் அருளால் நாரதரும் தம் உண்மையுருவ மெய்தினர். ஆனந்த பரவசமடைந்திருந்த அத்ரி மாமுனிவர் தம் இல்லாளுடன் மூவர்களையும் துதித்துப் பணிந்தெழுந்து கரங்குவித்து 'வேதமுடிப் பொருள்களே! இதுவும் நுங்களது திருவிளையாடல் போலும்! மூன்று சிறந்த இனிய குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்த நாங்கள் இனி நீங்கள் மறைந்தபின் எவ்வாறு இங்கு வசிப்போம்? என்னையும் என் மனைவியையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்' என மொழிந்தனர்.

இதைச்செவியுற்ற திருமால் புன்முறுவல் கொண்டு 'முனி புங்கவா! உன் மனைவியாய அநசூயையின் கற்பழகைக் காசினியிலுள்ளோர்க்கு எடுத்துக்காட்ட நாங்கள் உங்களிருவர்க்கும் புதல்வராகத் தோன்றினம். இதற்கோரடையாளமாக நாங்கள்மூவருஞ் சேர்ந்து ஓரற்புத உருவம் கொண்டு அவனியில் உங்களது புதல்வனாகத் தோன்றி நற்றவம் புரிந்து தருமத்தைக் காத்தருள்வோம்; இது நீ யளித்த உருவமாதலின் இம்மூர்த்தியை "தத்தாத்திரேயர்" என்றழைப்பர் அவனியிலுள்ளோர். உன் நற்றவமும் உன் இல்லாளின் கற்புநிலையும் செழித்து வாழ்க' என்று வாழ்த்தி நாரதருடன் மறைந்தார். விஞ்சையர் முதலான பிறரும் தம் தம் பதிக் கேகினர்.

'நண்ணு கற்புடை நங்கையர் சீறடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றஃ
தெண்ணு கின்ற தலங்க ளெவற்றினும்
புண்ணி யத்தல மென்று புகல்வரால்'

# நாளாயனி.

---

புண்ணிய பூமியெனப் புகழப்படும் நமது பரதகண்டத்தில் பல்லாண்டு முன்னர் நளன் என்று ஒரு அரசன் மநுமுறை தவறாது அரசாண்டு வந்தான். இவனது அரசாட்சி செழித்து ஓங்கி வளர்ந்தது; குடிகள், பஞ்சம் பிணி முதலாய துன்ப மெதுவு மின்றி அரசனிடம் உள்ளன்பு கொண்டு வாழ்ந்தனர்; இம் மாத்திரமேயன்றி இயற்கைப் பகைகொண்ட விலங்குகளும் பறவைகளுங்கூட தம் தம் பகை ஒழித்து ஒற்றுமையாய் நட்புடன் வாழத் தலைப்பட்டன; பைங்கிளியும் ஆடற் பருந்தும் ஒரு கூட்டில் வதிந்தன; கலைமானும் வெங்கட் புலியேறும் ஒரே பொய்கையில் நீர் பருகலாயின. பையரவமும் கீரியும் கொஞ்சி விளையாடின. இத்தகைய நட்பு நீடித்திருக்குமாறு, பல பிராணிகளின் குறைகளையும் போக்கிச் செவ்வனே செங்கோல் செலுத்தும் அம்மன்னனுக்கு நாளாயனி எனும் பேர்பூண்ட அருமைப் புதல்வி ஒருத்தி இருந்தனள்.

அவளோ இயற்கை வனப்பு வாய்ந்தவள். அரசனது மகள் ஆதலால் அவள், விலையுயர்ந்த ஆடைஆபரணங்களை அணிந்து செயற்கை வனப்பும் பெற்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வந்தாள். அவ அரசன், தன்மகளுக்குத் தக்க ஆசிரியரைத் தேடி, அவரைத் தன் அரண்மனைக்கு வரவழைத்து ஆதரித்து, அவரைக் கொண்டு நாளாயனிக்குத் தகுதியான கல்வி கற்பிக்க, அவளும் நுண்ணறிவு வாய்ந்து கல்வி கேள்வி

களில் தேர்ச்சி பெற்றிருந்தனள். இங்ஙனம் பல ஆண்டுகள் செல்ல நளாயனி, விவாகத்திற்கு ஏற்ற பருவமுற்றனள். தன் புதல்விக்குத் தக்க மணாளன் கிடைக்க வேண்டுமே யென்று அரசன் கவற்சி கொண்டு அதற்கென்று ஓர் உபாயஞ் செய்தான்.

ஒருநாள் மன்னன், மகளைத் தன்னருகு அழைத்து 'குழந்தாய்! நளா! தக்க பருவம் வாய்ந்த நீ, உன் கருத்திற்கு இசைந்த இனிய மணாளனை மன்றல் புரிந்து வாழ்வாயாக. பெற்றோர், தம் பெண்களுக்கென்று வரன் தேடுதலைப் பார்க்கிலும், அப்பெண்களே தம் மனத்திற்குப் பொருத்தமான ஆடவர்க்கு மணமாலை சூட்டுதல் சாலச்சிறக்கு மன்றோ? அத்தகைய விவாகமே மாட்சிமைப்படு மென்பது எனது கொள்கை. உன்னை மணம் புரிய விரும்பி எவரேனும் என்னை நண்ணி என் அனுமதி கேட்பரேல் அவரை நான் உன்னிடம் அனுப்பி உன் சம்மதம் பெற்று அதற்கு அறிகுறியாக உனது முத்திரை மோதிரத்தைக் கொணர்ந்து எனக்குக் காட்டும்படி செய்வேன். ஆதலால், அங்ஙனம் உன்னை நாடிவருபவர்களில் எவனை நீ மணம் புரிய விரும்புகின்றனையோ அன்னோனுக்கு உனது விரலாழியைத் தருக' என்று கூறி ஆசீர்வதித்து அனுப்பினன். அதன் பிறகு நளாயனி தனது கன்னிமாடம் புகுந்து பல பணிப் பெண்கள் தன்னைச் சூழ்ந்து ஏவல் புரியக் குறை யொன்று மின்றி அந்தப்புரத்தில் வாழ்ந்திருந்தனள்.

நளாயனியின் கல்வி, குணம், ஒழுக்கம், அழகு முதலியவை அனைத்தையும் கேள்விப்பட்டு, பல தேயத்தினின்றும் பல அரசகுமாரர்கள், அவள் தந்தையைக்



கண்டு தங்கள் எண்ணத்தை வெளியிட்டு, அகுற்த அவன் சொல்லிய வாறே அன்னோர் அவ் விளமங்கையை நேரிற் கண்டு தங்கள் விருப்பங்கூறி வேண்ட, அவள் அவர்களில் எவரையேனும் விரும்பினாளில்லை. அன்னோர் போலவே பலர், விருப்புடன் அவளிடம் வந்து பின்பு வெறுப்புடன் ஏகினர்.

இங்ஙனமிருக்க ஒரு நாள், மௌத்கல்யர் எனும் முனிபுங்கவர் அந்த நளராஜனது இனிய அரண்மனையைக் குறுகி அரசனை நேரிற் கண்டார். வேந்தன், முதிய வேதியர்க்குக் கைந்நீரும் அடிநீரும் உண்ணீரும் உதவி முறைப்படி வந்தனை வழிபாடுகள் புரிந்து அவரை ஆசனத்திலிருக்கச் செய்து 'சுவாமி! நும்போன்ற மகான்களின் வரவு மிக்க அரிது. தேவரீரைத் தொழுது உபசரிக்கும் பாக்கியத்தை அடியேன் இன்று பெற்றேன். இனி என் பாவம் தொலையு மென்பது திண்ணம். தேவரீர் இம்முதிய பருவத்தில் வருந்தி வழிநடந்து நாயேனை ஒரு பொருட்டாக நினைத்து இங்கு எழுந்தருளியதின் காரண மேதோ அறிகிலேன். அடியேனால் நுமக்கு ஆகற்பாலது ஏதேனும் உண்டோ? அருள் புரிக; காத்திருக்கிறேன்' என வணக்கத்துடன் கேட்டனன்.

அதற்கு முனிவர் 'இராஜாதி இராஜனே! உன்புகழ் நீடூழிவாழ்க; யான் கொண்ட எண்ணம் ஒன்றுண்டு; அது இன்னது எனச்சொல்வேன் கேள்; யான் வனத்தில் வசிப்பவன் என்பதை நீயே அறிவை; எனக்கு வயதோ மேலிட்டது; உடலோ தளர்ந்தது; தலையோ நரைத்தது; முதுகோ கூனிட்டது; ஐம் புலன்களிலும் ஐம்பொறிகள் மழுங்கின; இத்தகைய நிலையில் யான், தனியாக

யிருத்தல் அநுசிதமன்றோ? எனக்குப் பணிவிடை செய்
யக் கூடியவர்களோ எவருமில்லை; என் செய்வது! கல்வி
கேள்விகளோடு நுண்ணறிவும் நற்குணமும் வாய்ந்த உன்
தநயை நாளாயனியை எனக்கு மணம் புரிவிப்பையேல்
என் குறை நீங்கும்; என்தவமும் செழித் தோங்கும்'
என வாய் கூசாது வேண்டினர். கிணறு வெட்டப்பூதம்
புறப்பட்டது போல் அரசன் ஒன்றும் தோன்றாது
சிறிது போது திகைத்து இருந்து 'எல்லாம் விதியின்படி
நடக்கும்; நம்மால் ஆவது எதுவுமில்லை' எனத்தேறி முனி
வரை நோக்கி 'மாதவம் புரியும் முனிபுங்கவரே! தேவ
ரீர் கூறிய விஷயத்தில் அடியேன் செய்யக் கூடியது
ஒன்றுமில்லை; நாளாயனி உம்மை மணம் புரிய இசைவா
ளாயின் உமது எண்ணம் பூர்த்திபெறும். ஆதலால்,
தேவரீர் அவளை நேரிற் கண்டு அவளது சம்மதம் பெற்று
அதற்கு அறிகுறியாக அவளது முத்திரை மோதிரத்
தைக் கொணர்ந்து எனக்குக் காட்டுவீரேல், யான் அக்
கணமே கடிமணச் சடங்கை முடித்து அவளை உம்மு
டன் அனுப்புவேன். என்மீது வேறு அபிப்பிராயம்
கொள்ளற்க' என்று வேண்டினன். மன்னன் கூறிய
மொழியில் உண்மை இருக்கக்கண்ட முனிவர் உடனே
அவ்விடம் விட்டு அகன்று, நாளாயனி வதியும் கன்னிமா
டம் நோக்கிச் சென்றார்.

முனிவர், தம் தபோமகிமையால் தம் உண்மை
உருவத்தை மறைத்து, பார்ப்பவர் கண்ணைக் கவரும்
யௌவனம் வாய்ந்த ஒரு சுந்தர புருஷ வடிவங் கொண்டு
அவளை நேரிற்கண்டு தம் காதல் இயம்பி மணம் புரிய
வேண்டினர். எதிரில் தோன்றிய அச் சுந்தர புருஷனைக்



கண்ட நாளாயனி அவன்மீது காதல் கொண்டு, தன்
கருத்துக்கு இசைந்த கணவன் கிடைத்தானென்று
உவகைபூத்துக் கணையாழியைக் கழற்றி அவனிடம் தந்து
'என் ஆருயிர்த்தலைவ! இனி எனக்குத் தந்தையும் தாயும்
தெய்வமும் நீரே; உம்மை வழிபடுதலே என் கடமை
யாகும்; பெண் தன்மையால் யான் ஏதேனும் அறியாது
பிழை செய்திடில் அது காரணமாக நீர் என்னை வெறு
த்து விலக்காதேயும்; இதுவே எனது வேண்டுகோள்'
என்று கூறி வணங்கி நின்றாள். அதற்கு அவன் 'பெண்
ணே! உலகத்தில் மானிடர்க்குப் பிறப்பு, பிணி, மூப்பு,
சாக்காடு முதலியவை நேரிடல் இயற்கை; சிலர் முற்பிறப்
பிற் செய்த நல்வினைப் பயனால் செல்வமும் சுகமும் வாய்
ந்து வாழ்வர்; சிலர் தீவினைப் பயனால் ஊணும் உடை
யுமே யின்றி நல்குரவால் நலிவர்; இவைகளை மாற்ற நம்
மால் ஆவது ஒன்றுமில்லை. ஆதலால் நீ இவ் வுண்
மையை அறிந்து இன்பதுன்பங்களை ஒன்றாகப் பாவித்து,
நற்குண நற்செய்கையோடு இல்லறம் நடத்துவையேல்,
அதுவே நம் மிருவர்க்கும் பெருமையாகும்; நீ என்மீது
கொண்ட காதலை யான் உன் தந்தைக்குத் தெரிவித்து
அவரது உத்தரவு பெற்று விதிப்படி உன்னைக் கடிமணம்
புரிந்து அதன்பின் உன்னை அழைத்துச் செல்வேன்'
என்று கூறி விடைபெற்று வெளியே ஏகினன்.

முக் குறும்பு கடிந்து மாதவம் புரியும் மௌத்கல்ய
முனிவர், தாம் கொண்ட போலி உருவம் போக்கி உண்
மை வடிவம் வாய்ந்து நாளாயனியின் தந்தையை ஆவலு
டன் கண்டு, 'வேந்தே! இனி எனக்குக் குறையொன்று
மில்லை; என் வாணாளில் இன்னாளே நன்னாள்; உன் புத

ல்வி நாளாயனி என்னை மணம்புரியப் பூர்ண சம்மதங் கொண்டுள்ளாள்; இதோ பார் அவள் தந்த முத்திரை மோதிரம்' என்று மகிழ்ச்சியோடு கூறினர். அரசன் அதைக் கேட்டு வியப்பும் கோபமுங் கொண்டு, முனிவரென அஞ்சி ஒன்றும் பகராது சிறிது போது சிந்தை நோயால் வருந்தி அதில் ஏதோ வஞ்சகமிருக்கக் கூடுமென நினைத்து அருகிருந்த பணியாளரை விளித்து, புதல்வியை அழைத்துவர உத்தரவு அளிக்க, அன்னோர் விரைவிற் சென்று அவளை அழைத்து வந்து அரசன் முன்பு விடுத்தனர்.

அப்பொழுது வேந்தன், தன்னருமைப் புதல்வியை நோக்கி 'குழந்தாய்! இதோ வீற்றிருக்கும் இம் முனி புங்கவர்க்கு மணமாலை சூட்ட நீ இசைந்தது உண்மையோ?' எனக் கேட்க அதற்கு நாளாயனி 'தந்தாய்! நான் இம்முனிவரை இதுகாறும் கண்டதே இல்லை; அன்றியும் நான், முன்னமே ஒருவர்மீது காதல் கொண்டு அவர்க்கு என் முத்திரை மோதிரத்தை அளித்திருக்கிறேன்; அவரே என் காதலராவர்' என்றாள்.

அதற்குத் தந்தை 'இம்முனிவர்க்கு இம்மோதிரம் எங்ஙனம் கிடைத்தது? இதோ பார்; இது உன் முத்திரை மோதிரமல்லவா? இதை இம் முனிவர் எவ்வாறு பெற்றனரோ அறியேன்; யானோ முன்னம் கூறிய வாக்கின்படி இம் முனிவர்க்கே உன்னை மணம் புரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்; நீயோ வேறொருவன்மீது காதல் கொண்டதாகக் கூறுகின்றனை; முனிவரோ உன்னை அழைத்துச் செல்லக் காத்திருக்கின்றனர்; என் செய்வது?' என்று கூறி வருந்தினன். உண்மை அறியா



மையால் நாளாயனி, மதிமயங்கி அசைவற்றுப் பதுமை போல் நின்றனள். முனிவர் மாத்திரம் முக மலர்ச்சியோடும் தைரியத்தோடும் வீற்றிருந்தனர்.

நிருபன் சிறிதுபோது மௌனமுற்றிருந்து அதன் பிறகு அம் முனிவரை மும்முறை வலம்வந்து வணங்கி, 'சுவாமி! உம்மோடொத்த தபோதனர், முக்காலமும் உணர்வரன்றோ? நீவிர் அனைத்தையும் அறிவீர்; இப்பொழுது யானும் என்னருமைப் புதல்வியும் கொண்ட கவற்சி விலகுமாறு உண்மையை வெளியிடவேண்டும்; அருள்புரிக' என்று பிரார்த்தித்தனன்.

அப்பொழுது மௌத்கல்ய முனிவர் வேந்தனை நோக்கி 'வேந்தே! உன் மகளிடம் மோதிரம் பெற்றது யானேயன்றி வேறெவருமில்லை. இவ்வுருவத்தோடு சென்றால் அவள் என்னை ஒருகால் வெறுக்கக்கூடுமென நினைந்து இவ்வுருவம் களைந்து வேற்றுருவங் கொண்டு அவளைக் கண்டு இவ்வாழியைப் பெற்றேன். தபோதனர் வேற்றுருவங் கொள்ளும் சால்புடையார் என்பதை நீ அறியாய்போலும். நீ முன் மொழிந்ததைப் பின் மறுப்பையேல் உன் வாக்குப் பொய்யாகும்; உன் குலத்திற்கே பழி நண்ணும்; அவள் வெறுப்பளேல் அவள் கற்புக்குப் பழுதாகும். ஆதலால் காலதாமதமின்றித் திருமணம் முடித்து நாளாயனியை என்னுடன் அனுப்புக' என்றார்.

இரக்கம் சிறிதுமின்றி முனிவர்கூறிய மொழியைக் கேட்ட பார்த்திபன் 'என்னே! இம்முனிவர்க்கு என் அருமை மகளை மணம் புரிவிக்குமாறு நேரிட்டதே! கண்ணிற்கு இனிய காதலனை மணந்து இனிது வாழ்வளென

நினைத்திருந்தேன்; முதிய முனிவரோடு வாழ விதி இருந்ததன்றோ! என் செய்வது! யான் முன்னம் கூறியவாறு நடக்க வேண்டு மன்றோ! மறுப்பனேல் பழிக்கும் பாவத்திற்கும் யான் ஆளாவேன்; அன்றியும், முனிவர் ஒருவேளை சீற்றங்கொண்டு சபிப்பினும் சபிப்பர்; ஆதலால் இவட்குக் கூறுவன கூறி மன்றல் முடித்து அவருடன் இவளை அனுப்புவதே நலம்' என்று துணிந்து தன் அரும் புதல்வியை நோக்கி 'குழந்தாய்! நாளா! இதோ வீற்றிருக்கும் இம் முதிய முனிவர் நின் விரலாழியைப் பெற்று வந்தவரல்லவா? நீயும் அவரை விரும்பினாய் போலும். நீ அவர்க்குக் காதலியாகுக' என்றான்.

நாளாயனி அம்மொழிகளைக் கேட்டுச் சிறிது போது திகைத்து நின்று, முனிவரை உற்று நோக்கிய வண்ணமாய் 'என்ன புதுமை இது! இவ் விருத்தரை நான் இதுவரையிலும் கண்டதில்லையே! என்னிடம் மோதிரம் பெற்றுச் சென்றவர் ஒரு சுந்தர புருஷராயிற்றே! இது என்ன விபரீதம்?' என்று சிந்தித்து ஏங்கி இருந்தனள்.

அப்பொழுது அரசன் அவளை அருளுடன் நோக்கி 'அம்ம! உன்னிடம் மோதிரம் பெற்று வந்தவர் இம் முனிவரே; சற்று முன்பு அவர் கூறியதைக் கேட்டிலையோ? இனிமேல் நீ மறுப்பது தகாது; யான் வாக்குப் பிசகுதலும் அடாது; அவர் மாமுனிவர் ஆதலால் அவரை நீ மணப்பது சாலச் சிறக்கும். உனக்கு மங்களம் உண்டாகுக' என்றான்.



நுண்ணறிவும் நற்குணமும் வாய்ந்த நாளாயனி, உண்மை யறிந்து மனக்குறை ஒன்றுமின்றி, முனிவர்க்கு அடிமை செய்யும் பாக்கியம் பெற்றமைக்காக உள்ளம் உவந்து தந்தை சொற்கும் இணங்கி முதிய அம்முனிவரை மணம்புரிய விரும்பினள். அரசன் அதன்பின் முறைப்படி மகட்கு மன்றல் முடித்து அவளை அவரிடம் ஒப்புவித்தான்.

அப்பொழுது முனிவர் அருகிலிருந்த நாளாயனியை நோக்கி 'பெண்ணே! என்னைச் சற்று நன்கு உற்றுப்பார்; நானோ தவசி; அன்றியும் விருத்தன்; என்னால் உனக்கு யாதொரு சுகமும் கிடைக்காது; அன்றியும் நீ என்னுடன் காட்டில் வசிக்கவேண்டும்; உனக்கு நல்ல உணவும் கிடைப்பது அரிது; நின்தந்தை யகத்தில் நீ அறுசுவையுடன் நால்வகை உண்டியும் இதுகாறும் நன்கு அயின்று அன்புடன் இனிது வளர்ந்தாய்: காட்டில் உனக்கு என்ன கிடைக்கும்? கந்த மூல பலாதிகளையே யுண்ண வேண்டும்; அன்றியும் அவை சில நாள் கிடைக்கும்; பல நாள் கிடைக்கா; அன்றியும் நீ என் மனத்திற்கு இசைந்து எனக்குத் தொண்டு புரியவேண்டும்; இத்தகைய வருத்தங்களை யெல்லாம் சகித்து என்னுடன் வாழ விருப்பமுண்டாயின் நீ என்னுடன் வருக; இல்லாவிடில் இங்கேயே இருந்துவிடு' என்று வெளிப்படையாகக் கூறினர்.

அம்மொழிகளைக் கேட்ட நாளாயனி முனிவரை வணங்கி 'முனிவர் பெரும! விவாகம் ஆயின பிறகு பெண்கள் தந்தையகத்திலும், பிற சுற்றத்தாரகத்திலும்

இருத்தல் கூடுமோ? கற்பிற் சிறந்த பெண்கள் தங்கள் கொழுநரையன்றி வேறு தெய்வங்களையும் தொழார் அன்றோ? ஆதலால் யான் வழிபடும் தெய்வம் தேவரீரே அன்றி வேறுண்டோ? எனக்கு இனித் தகப்பன் வீட்டில் காரிய மொன்று மில்லை. உம்முடன் வர இதோ காத்திருக்கிறேன்' என்று வணக்கத்துடன் கூறினள்.

அதன்பிறகு முனிவர் வேந்தனது அனுமதிபெற்று நாளாயனியைத் தம்முடன் கொண்டு காட்டிற்கு ஏகினர். கற்புக் கொழுந்து எனச் சொல்லத்தக்க அப்பெண், வனம் நண்ணி முனிவரோடு வதிந்து, அவர் மனம் களிக்குமாறு விருப்பத்துடன் பல பணிவிடை செய்து வரலாயினள். இங்ஙனம் சில நாட்கள் சென்றன.

மௌத்கல்ய மாமுனிவர் நாளாயனியினது கற்பின் உறுதியையும் அன்பின் நிலைமையையும் பரிசோதிக்கக் கருதிச் சில உபாயங்கள் மேற்கொண்டனர். அவர் செய்தவை என்ன? முனிவர், தம் சரீரத்தில் பெரு மூப்பும், மிகுந்த குஷ்டநோயும், அதனால் மாறுபட்ட உருவமும், துர்க்கந்தமும் உடையோராய்த் தோன்றினர்; அன்றியும் அவர் எப்பொழுதும் நாளாயனிமீது கடுங்கோபம் கொண்டு அவளை வருத்தப்படுத்தலே யன்றி, எக் காலத்திலும் மகிழ்தலின்றிப் பழிக்கலாயினர்.

அவர் அவ்வாறு பன்முறை கொடுமை செய்யவும், நாளாயனி வெறுப்பின்றி தூய மனத்துடன் அவர்க்குப் பல வகை உபசரணைகளையும் வெறுப்பின்றி புரிந்து வந்த



னள். கற்பிற் சிறந்த பெண்களின் ஒழுக்க முறைமையின்படி அவள் தினந்தோறும் முனிவர் உண்டு மிகுந்த எச்சிலை உண்பது வழக்கம். பதிவிரதைகட்கு இதுவும் ஓர் அரிய விரதம் என்பர் தெளி நூல் வல்ல சான்றோர்.

ஒருநாள் முனிவர், போசனம் முடிக்கையில் தமது கை விரலில் ஒன்று குட்ட நோயின் கடுமையால் நைந்து அற்றுத் தாம் உண்ட மிச்சிலில் விழுந்து கிடக்கச் செய்தனர். அவர் புசித்து எழுந்த பின்னர், நாளாயனி கொழுநற்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்து வழக்கப்படி மிச்சிலை யுண்ணும்போது அவ் விரலை எடுத்து வைத்துவிட்டு மீதி உணவை அருவருப்பின்றி அன்புடன் உண்டனள். முனிவர் இஃதோடன்றி மீண்டும் அவளைச் சோதிக்கக் கருதி மற்றொரு நாள் அவளைச் சினந்து நோக்கி 'பெண்ணெனும் பேயே! உன்னை மணந்ததனாலே எனக்கு இக்குட்ட நோய் கண்டது. பாவியாகிய உன்னை நான் தெரியாது வேட்டேன். இக் கன்ம நோயை யான் எங்ஙனம் ஒழிப்பது? தீர்த்த யாத்திரை மேற்கொண்டாவது பலவிடத்துள்ள புனித நீரில் புனலாடினால் ஒரு வேளை இந்நோய் விலகலாம்; யானோ சக்தி யற்றவனாய்விட்டேன்; என் எண்ணத்தை எவ்விதம் முடிப்பதோ அறியேன். அந்தோ! என்செய்வது!' என்று வருந்திக் கண்ணீர் சொரிந்தனர்.

அப்பொழுது நாளாயனி 'சுவாமி! நான் செய்யக்கூடியது இன்னதென அறிகிலேன்; உம் நோயைப் போக்க எனக்கோ சக்தியில்லை; நீர் எவ்வெவ்விடங்களுக்கு ஏக நினைக்கின்றீரோ அவ்வவ்விடங்களுக்கு நான்

உம்மைச் சுமந்து செல்கிறேன்; உன்னியபடி தீர்த்தயாத்திரையை முடித்துக் கொள்ளலாம். எனது உடலும் உயிரும் உமக்குப் பணிவிடை செய்தற்கே யல்லாது வேறு எதற்கு? உமக்குத் திருவுள்ளம் உண்டாயின் அங்ஙனம் செய்கிறேன்' என்று அன்புடன் உரைத்தனள். முனிவர், அம்மொழிகளைக் கேட்டு ஒருவாறு மனம் தேறித் தீர்த்தயாத்திரைக்குத் தம்மை நோவாது எடுத்து ஏக நியமித்தனர்.

நோயால் உடல் நைந்த முனிவரை எடுத்துச் செல்லுதற்காக நாளாயனி, கூடையொன்று சேகரித்து அவர் தேகத்திற்கு யாதொரு தீங்கு மில்லாமலிருக்க வேண்டுமென்று மெல்லிய தளிர்களை அதில் பரப்பி முனிவரை அதில் இருக்கச் செய்து பல இடங்களுக்கு எடுத்துச்செல்வாளாயினள். முனிவர் விரும்பும் நீர்க் கரை தோறும் அவள் அக்கூடையைத் தரைமீது வைக்க அவர் புனலாடித் தம் கருமம்முடிப்பர். இதற்குள், அவ் வுத்தம மாது இனிய கனி முதலியன சேகரித்து அவர்க்குப் பசியார உணவுஉதவுவள். இவ்வண்ணமே நாளாயனி, தன் கொழுநரை ஆராதித்து வந்தனள். இவளது கற்பை அம்முனிவர் மேன்மேலும் பரிசோதிக்க வேண்டுமென்று வெவ்வேறு உபாயங்கள் தேடினர். அவை அனைத்திற்கும் அவள், மனம் இசைந்து அவர்க்குத் திருப்தி யுண்டாக்கினள். ஆகவே அவளது கற்பின் வன்மை நாட்கு நாள் உறுதிப்படலாயிற்று.

இங்ஙனம் சில நாள் செல்ல ஒரு நாள் விடியற்காலை, பொழுது புலரு முன்னம் அவள் தனது வழக்கப்



படி கொழுநரைச் சுமந்து செல்லுங்கால், இடைவழியில் விதியின் செயலால் கழுவேற்றப் பட்டிருந்த மாண்டவ்விய முனிவரின் காலில் அவளது தலைச் சுமையாகிய கூடை தட்டுப்பட்டது. கழுவேறுண்டதாலாகிய வருத்தத்தோடு இதுவும் சேர அவர்க்கு வருத்தம் அதிகமாயிற்று. மாண்டவ்விய முனிவர் சீற்றங் கொண்டு தலைச் சுமை கொண்டுள்ள அப் பதிவிரதையினது கற்பின் பெருமையை அறியாராய் 'பேதாய்! இங்ஙனம் செய்து என்னை வருத்தினையாதலின் பொழுது விடிந்தவுடன் நீ மாங்கலியமிழந்து அமங்கலி ஆகக் கடவை' என்று சாபமிட்டனர். தவத்தின் பெருமையை விடக் கற்பின் பெருமை மிக்கது என்பதை அம்முனிவர் அறியார் போலும். அவரது சாப வுரை அவளது செவியிற் பட்டதும் அவள் வருந்தி 'பொழுது புலராமற் போகக் கடவது' என்று சபித்தனள். ஆகவே சூரியன் தனது போக்கைத் தவிர்த்து அசைவற்று நிலைத்து நின்றான். தேவர்கள் திகைத்தனர். பிரபஞ்சம் முழுமையும் விபரீதமாயின. தேவர்கள், மும்மூர்த்திகளிடம் சென்று முறையிட்டனர். அன்னோர் மூவரும் தேவர்கள் புடைசூழ நாளாயனியிடம் வந்து சாபநிவாரணம் செய்ய அவளை வேண்டினர். அப் பத்தினிப்பெண் அவர்களைத் தொழுது 'சுவாமிகாள்! மாண்டவ்விய முனிவர், எனக்கிட்ட சாபத்தை முதலில் விலக்குவாராயின் யானும் எனது சாப மொழியை மாற்றுவேன்' என்று கூறினள். பத்தினிப் பெண்டிர் வாய்மொழிக்குப் பரம்பொருளுங் கட்டுப்படுமன்றோ? அதன்பின் மும்மூர்த்திகள் முதலானோர் மாண்டவ்விய முனிவரிடம் சென்று அவர் இட்ட சாபத்தை அகற்றுமாறு அவரை வேண்டினர். மாண்டவ்விய

முனிவர் முதலில் தமது சாபத்தை நீக்க, நாளாயனியும் தனது சாபத்தை விலக்கினள். தேவர்கள் முதலானோர் இவளது கற்பின் நிலைமையையும், பெருமையையும் கண்டு அதிசயித்து அவளைவாழ்த்தித் தங்கள் தங்கள் உறைவிடம் நண்ணினர்.

இவை யனைத்தையும் மௌத்கல்ய முனிவர் அறிவாரன்றோ? இனியும் அவளது கற்பைப் பரிசோதிக்க வேண்டுமோ? கொஞ்சகாலமேனும் அவள் சுகமாக வாழ வேண்டுமன்றோ? ஆதலால் மௌத்கல்யர் பெருமகிழ்ச்சி கொண்டு நாளாயனியை நோக்கி 'பெண்ணே! நான் உன் குணங் கண்டு மகிழ்ந்தேன். எனது உண்மையான தோற்றம் இதுவன்று. யான் குட்டநோயினனும் அல்லேன்; குரூபியுமல்லேன்; விருத்தனுமல்லேன்; உனது கற்பின் நிலைமையைப் பரிசோதிப்பதற்கென்றே யான் இத்தகைய உருவமும் நோயும் கொண்டேன். உன் குணத்தை நன்கு பரிசோதித்து அறிந்தேன்; சால உவந்தேன்; நீ வேண்டும் வரம் தர இசைந்துளேன்; நீ விரும்புவது என்ன? இயம்புக' என்று கூறிப் பொய்யுருவம் போக்கி மெய்யுருவங் கொண்டு ஒரு யௌவன சுந்தர புருஷராய் விளங்கினர்.

நாளாயனி மௌத்கல்ய முனிவரைத் தொழுது 'சுவாமி! அடியேன் நும்முடன் கூடிச் சுகித்து வாழ நினைத்திருக்கிறேன். மறு பிறப்பிலும் நான் ஒரு பெண்ணாகப் பிறந்து நும்மையே கொழுநராகப் பெற்று இனிது வாழ நினைத்திருக்கிறேன்; இதுவே எனது உண்மையான பிரார்த்தனை' என்றுகூறி அருள்புரிய வேண்டினள்.



மௌத்கல்யர், அவ்வாறே அநுக்கிரகித்து மகிழ்ந்து தமது அழகிய உருவத்துடன் அவளை ஊடியும் கூடியும் பலவகையாக இன்பம் துய்த்தனர். இதுகாறும் பட்ட துன்பம் முழுமையும் நாளாயனி மறந்தவளாகி அவருடன் சிலகாலம் இன்பம் துய்த்துப் பின்பு அப் பிறவியை முடித்தனள்.

தான் முன்னம் பெற்ற வரத்தின்படி நாளாயனி அடுத்தபிறப்பிலும் ஓர் அழகிய பெண்ணாகத் தோன்றி இந்திரசேனை யென்னும் பெயர் கொண்டவளாகி அம் மௌத்கல்ய மாமுனிவரையே மணந்து இனிது இருந்தனள். இங்ஙனம் சிலநாள் செல்ல அம்முனிவர், தமது செயலை வெறுத்துக் கழிவிரக்கங் கொண்டு, முவ்வகை ஆசையையும் துறந்து தவம் புரியச் செல்வாராயினர். அப்பொழுது இந்திரசேனை அவரைத் தகைந்து 'சுவாமி! உம்மை விட்டு நான் எங்ஙனம் பிரிந்திருப்பேன்? இவ்விளம் பருவத்தில் யான் தன்னந்தனியளாக அன்றோ இருக்கலாயிற்று! என்னை விட்டுப் பிரியலாகாது' என்று பிரியத்துடன் தடுத்தனள்.

அப்பொழுது அந்த மௌத்கல்லிய முனிவர் அவள் மீது கோபங்கொண்டு 'பெண்ணே! நீ என் தவத்தைத் தடுக்கின்றமையால் நீ மானுட கர்ப்பத்தில் உதித்து ஐந்து புருஷரைச் சேரக் கடவை' என்று சபித்து ஏகினர். அதன்பின் அவள், அம்முனிவர்மீதே ஆசை மிஞ்சியவளாகி இன்னது செய்வதென்று அறியாது திகைத்துப் பின்பு அர்த்தநாரீசுவரனாகிய பரமசிவனைக் குறித்துத் தவஞ் செய்தனள். ஐந்து முகங்களையுடைய

பரமசிவன் இவளது தவத்திற்கு உவந்து கிருபை செய்தருள உன்னி இடபவாகனத்தின் மீது பார்வதி சமேதராய்ப் பிரத்தியக்ஷமாகி இந்திரசேனையை நோக்கி 'பெண்ணே! நீ வேண்டும் வரம் என்ன?' என்று கேட்க, அவள் கூப்பிய கையளாய் 'சுவாமி! எனக்கு ஏற்ற நாயகனைத் தருக; நாயகனைத் தருக' என்று ஐந்து முறை ஆவலொடு வேண்டினள். ஐந்தானனத்தோன், இவளது விருத்தாந்தம் அறிந்து இவள் வேண்டிக் கொண்டபடி ஐந்து நாயகர்களைப் பெறுமாறு ஐந்து ஆன சொல்லால் வரம் அளித்தனர்.

"அன்னோனைகலவவன்மேலவளாசைமிஞ்சி
யென்னொபுரிவதினியென்றலுமேந்தல்கூற்றாற்
றன்னோர்வடிவினொருகூறொருதையலாளு
முன்னோனைநோக்கித்தவஞ்செய்தனண்மூரல்வாயாள்"

"ஐந்தானனத்தோனருள்செய்பவழகின்மிக்கா
னைந்தானசொல்லாற்கணவற்றருகையவென்று
னைந்தானசொல்லானளித்தான்மற்றவனுமுன்னொ
னைந்தானபோகமிவளெய்தியவாறறிந்தே"(வில்லிபாரதம்)

மங்கை பாகன் இங்ஙனம் கூறியதைக் கேட்டு இந்திரசேனை 'சுவாமி! என்மீது இரங்குமின்; ஐந்து பர்த்தாக்களை வரிப்பது அடாதாயிற்றே! என் செய்வேன்!' என்று ஏங்கினள்.

அப்பொழுது சடைமுடி அண்ணல் 'கற்பாரணங்கே! ஏன் வருந்துகின்றனை? உன் விருத்தாந்தம் முழுமையும் யான் அறிந்தே அங்ஙனம் கூறினேன்; மௌத்கல்ய முனிவர் கூறிய வாக்குப் பலிக்கவேண்டுமன்றோ? கணவனைத் தருக என்று நீயும் ஐந்துதரம் எம்மை வேண்



டினை; யாமும் ஐந்து சொல்லால் தந்தனம்; இவ்வரத்தை நீ அடுத்த பிறப்பில் அனுபவிக்க அருள்செய்கிறோம்; இதனால் உனக்குப் பழி யொன்றும் நேராது; இந்திரனது மகிமை வாய்ந்த ஐந்து உத்தம புருஷரை நீ வரிப்பாய்; அவர்கள் விண்ணவர்களேயன்றி மண்ணவர்கள் அல்லர்; அவர்களும் ஒரு சாபத்தால் பூமியில் தோன்றுவர்; அவர்களால் நீ பல சுகங்களையு அனுபவிப்பாய்; உனக்குக் குறை யொன்றும் நேராது; உத்தம பத்தினி என்று உலகம் உன்னைப் போற்றும்; வருந்தற்க; இதோ தோன்றும் இக்கங்கையில் நீ மூழ்கி எழு; எழும்பொழுது உன் எதிரில் தோன்றுபவனை என்னிடம் அழைத்துவா' என்று கூறிச் சற்றுச் சேய்மையிலிருந்த ஒரு குன்றின்மீது ஏகி அங்குப் பார்வதி தேவியுடன் இருந்து சொக்கட்டான் ஆடுபவராய் இனிது வீற்றிருந்தனர்.

இந்திரசேனை சிவபெருமான் கூறியவண்ணமே கங்கையில் மூழ்கி எழுந்து தன் விதியை நொந்து அழுது கண்ணீர் உகுத்து நீரில் இருக்க, அப்பொழுது அவளது கண்ணீர்த்துளி ஒவ்வொன்றும் ஒவ்வோர் செந்தாமரை மலராக நீரின்மீது தோன்றிற்று. அச்சமயம் ஆகாயத்தில் செல்லாநின்ற இமையோர்பதி, தையல் கண்ணீர் கமலமான புதுமை நோக்கி வியந்து, அவளைக் குறுகினான். சிவபெருமான் அருளிச்செய்த திருவாக்கின் சம்பந்தத்தால் இந்திரசேனை அவ்விந்திரனை அழைத்து உடன்கொண்டு ஏகிச் சந்திரமௌலி எதிரில் சேர்த்தாள்.

இந்திரன், தனது செல்வச் செருக்கால் சிவனைச் சிறிதும் மதியாது எதிரில் சென்றபோது அப்பெருமான்

அவனைக்கோபிக்க அவ்விந்திரன், அஞ்சி இறந்தவன்போல் கீழே வீழ்ந்தனன். இந்திரன் இவ்விதம் விழ, மழுவாளி இமைப் பொழுதில் அவனை மீண்டும் எழச் செய்து, ஆங்குமலையின்கீழ்ப் பொருந்திய பிலம் ஒன்றினைக்காட்டி 'இதோ பார் இதிலுள்ளோரை; உன்னைப்போல் தவறு செய்தமையால் இந்திரர் நால்வர் இப்பிலத்தில் அடைக்கப் பட்டனர். நீயும் இவர்களைப்போல் அடைபட்டு இவ்விடத்து இருப்பாயாக' என்று உரைத்தனர்.

கொடிய பிலத்தில் முன்னம் வந்திருந்த அந் நான்கு இந்திரர்களும் இப்பொழுது சுவர்க்கத்தினின்று வந்த இவ்விந்திரனும், அச்சமத்தில் சிவபெருமான் திருவடிகளைத் துதித்துத் தங்களை ஒருவாறு பொறுக்கும்படி வேண்டினார்கள். அப்பொழுது சிவபெருமான், அந்த ஐந்து இந்திரர்களையும் நோக்கி 'தேவர்களே! நீங்கள் இனி எப்பொழுதும் செல்வச் செருக்குக் கொள்ளாதே யுங்கள்; பிறரை அவமதியாதிருங்கள்; நீங்கள் ஐவரும் பூமியில் மனிதராய்ப் பிறந்து, இராச கன்னிகையாக மறுபிறப் பெடுக்கும் இப்பெண் ஒருத்தியை மணம் புரிந்துகொண்டு, உலகத்திற்குப் பல நன்மைகள்செய்து குற்றந் தீர்ந்து மீண்டும் தேவலோகம் அடைவீராக' என்று நியமித்தனர்.

அவ்விந்திரர் ஐவரும் பூலோகத்தில் அரசர்களாகப் பிறந்தனர். அவர்கள்தாம் பாண்டவர் எனப் படுவர். சிவபெருமான் நியமனத்தின்படி இந்திரசேனையும் ஓர் இராச கன்னிகையாகப் பிறந்து, திரௌபதி யெனும் பெயரோடு பாண்டவர்களை மணந்து வாழ்ந்தனள். உத்



தமமான பத்தினிப் பெண்டிர்களில் இவளும் ஒருத்தி யென்று உலகம் இவளைப் போற்றித் திருவிழா முதலியன செய்வித்து இவளைத் தெய்வமாகத் தொழும்.

1. முன்னின்றதேவன்மொழியின்படிகங்கைமூழ்கித்
தன்னந்தனிநின்றழுகின்றவத்தையல்கண்ணீர்
பொன்னங்கமலவனமானபுதுமைநோக்கி
யென்னென்றிவளையமை[illegible]னே

2. அவளைத்தொடர்பால்வருகென்னவவனுமாங்கட்
சிவனைச்சிறிதுமதியாதெதிர்சென்றகாலை
யிவனுக்கென்மேன்மையெனச்சீறலுமெஞ்சினன்போற்
புவனத்தெவருங்கையாடப்புலம்பிவீழ்ந்தான்.

3. வெவ்வாயுதங்களுதவாமல்விபுதராத
னிவ்வாறுவீழமழுவாளியிமைப்பின்மீண்டு
மவ்வாசவற்குப்பிலமொன்றிலடைந்தவச்சிரக்
கைவாசவர்களொருநால்வரைக்காட்டினனே.

4. வன்பாதலத்தில்வருநால்வரும்வானின்வந்த
புன்பாகசாதனனுந்தன்னடிபோற்றிநிற்ப
வன்பான்மகிழ்ரிவட்கைவருமாதிரென்று
மென்பாவைபங்கன்விதிக்கப்புவிமீதுவந்தார்.

(வில்லி பாரதம்)

149285

MADRAS DIAMOND PRESS.

Madras Diamond Press